'நானும் என் வீட்டாரும் ஆண்டவருக்கே ஊழியம் செய்வோம்' (யோசு 24:15)

# நற்செய்திப் பணியாளர்

(சிவகங்கை மறைமாவட்ட தன்னார்வ நற்செய்திப் பணியாளர்களின் மாதச் செய்தி மடல்)

அருள் :XV டிசம்பர் கி.பி. 2024 சான்று : 180



# வட்டாரத் தியானக் கூட்டங்கள்


சருகணி


தங்கச்சிமடம்


சிவகங்கை


பாம்பன்


மானாமதுரை


சாலைராமம்


ஆர்.எஸ்.மங்கலம்


இராமேஸ்வரம்


புளியால்


தேவகோட்டை


ஆவுடைப்பொய்கை

"உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகும்"(லூக் 2:13)
கடவுள் இயேசுவாக மனுவுரு எடுத்ததை நினைவு கூறும் கிறிஸ்து பிறப்பு நினைவு விழா உங்களிலும், குடும்பத்திலும், சமூகத்திலும், உலகிலும் அமைதியை உருவாக்க ஆண்டவர் தரும் அருளை நிறைவாய் பெற்றிட வாழ்த்துகிறோம்.

**கிறிஸ்து பிறப்பு நினைவு விழா, புத்தாண்டு மற்றும் யூபிலி 2025 ஆண்டின் வாழ்த்துகள்.**

**நற்செய்தி அறிவிப்புப் பணிக்குழு,** சிவகங்கை மறைமாவட்டம்

# உங்கள் சகோதரனிடமிருந்து

பாசத்திற்குரிய நற்செய்திப் பணிக் குடும்பமே,

"அஞ்சாதீர்கள், இதோ எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்" (லூக் 2:10) என்று வானதூதர் அறிவித்த அதே செய்தியை எனது வாழ்த்தாகவும் தெரிவித்து, உங்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியான கிறிஸ்துப் பிறப்பு நினைவுப் பெருவிழா வாழ்த்துக்களை அறிவிக்கிறேன்.

கிறிஸ்துமஸ் என்பது அனைவருக்குமான தனிப்பட்ட அனுபவமாக இருக்க வேண்டும். இயேசு யார் என்று உங்களுக்கு தெரியுமா என்று கேள்வி கேட்டால் நம்மில் பலருக்கு சரியான பதில் தெரியாது. அவர் உலக மீட்பர் என்று கூறலாம். அவர் உங்களை மீட்டிருக்கிறாரா? என்று கேட்டால், "ஆம், என்னை மீட்பதற்காக அவர் சிலுவையிலே தன் இன்னுயிரை தந்தார்" என்று எளிதாக கூறி விடலாம். இது சரியான பதில் போல தெரியும். ஆனால் இது நமது தனிப்பட்ட அனுபவமா? என்று கேள்விக்கு உட்படுத்தினால் நமக்கே ஒரு தெளிவான புரிதல் ஏற்படும். நாம் நினைத்த, கூறிய வார்த்தைகள் வீணானவைகள், அர்த்தமற்றவைகள் என்பது புரியும்.

இயேசு கிறிஸ்து ஆண்டவர் என் பாவங்களுக்காக பலியாக இவ்வுலகிற்கு வந்தார். என் பாவங்கள் அனைத்தையும் அகற்றிவிட்டு பாவம், மரணம் என்பனவற்றினின்று என்னை விடுவித்து விட்டார் என்ற உறுதியான அனுபவம், உணர்வு, அதற்கான ஆழ்ந்த விசுவாசம் நம்மில் எப்போது தோன்றுகிறதோ அப்போதுதான் கிறிஸ்து பிறப்பு நினைவுப் பெருவிழாவிற்கு பொருள் வருகிறது. நமக்கு தனிப்பட்ட இந்த உணர்வு ஆழமாக உள்ளதா? இயேசு கிறிஸ்து ஆண்டவர் எனக்காகப் பிறந்து, எனக்காக பாடுகள் பட்டு, என் பாவங்களுக்காக சிலுவையில் பலியாகி, எனக்காக அடக்கம் செய்யப்பட்டு, எனக்காக உயிர்த்தெழுந்து, எனக்காக மீண்டும் வருவார் என்ற ஒப்பற்ற இறை உண்மையை நமது சொந்த வாழ்வில் அனுபவமாக்கி இயேசு கிறிஸ்து ஆண்டவரை நம் சொந்த மீட்பராக ஏற்றுக் கொண்டு வாழ்வதுதான் உண்மை சீடத்துவ வாழ்க்கை. அதன் அடுத்த நிலை அதை பிறருக்குப் பகிர்ந்து வாழ்வது.

நாம் என்ன செய்தாலும், அது கிறிஸ்துவோடு உள்ள உறவுக்கு ஈடு இணையாகாது. அவரோடு எப்போதும் உறவில் நிலைத்திருப்பது மிக மிக அவசியமாகும். செபிப்பது, இறைவார்த்தை வாசிப்பது, வீடு சந்திப்பது, நற்செய்திப் பணி செய்வது கடவுளோடு உறவில் நிலைத்திருப்பதற்கு அவசியம். ஆனால் இவற்றை செய்வதால் நமக்கு அவரோடு உறவு இருப்பதாக கூற முடியாது. நமக்கு பதிலாக கிறிஸ்து பலியாக்கிய அந்த சிலுவைப் பலியின் அடிப்படையில், நான் பாவி என்று உணர்ந்து, பாவத்தை விட்டு மனம் திரும்பி (மனம் வருந்துவது போதாது) இயேசு கிறிஸ்துவை நம் சொந்த மீட்பராக, ஆண்டவராக (ஆளுகை செய்கிறவராக) ஆழ்ந்த உறுதியான

நம்பிக்கையால், விசுவாசத்தினால் பெற்றுக் கொள்ள வேண்டும். தகுதி சிறிதும் இல்லாத நமக்கு தம் அருளால் நம் நம்பிக்கையின் வழியாக மீட்பை அருளுகிறார் (எபே 2:8). அதை விசுவாசத்தோடு ஏற்க வேண்டும். நாம் தூய ஆவியானவரால் மறுபடியும் பிறக்க வேண்டும் (யோவா 3:5-8,தீத் 3:5). அப்போதுதான் கடவுளுக்கும் நமக்கும் இடையிலான உறவுக்கு தடையாக இருந்த பாவம் மன்னிக்கப்பட்டு அவருடைய பிள்ளைகளாக அவரோடு உள்ள உறவில் வளரமுடியும்.

கிறிஸ்துவோடு தனிப்பட்ட உறவு இல்லாமல் அவருக்கு உண்மைச் சீடராய் இருக்க முடியாது. மனம் திரும்பி கடவுளை விசுவசிக்கிற எந்த பாவிகளையும் மன்னித்து, தம் சொந்த மகனாக, மகளாக ஏற்றுக் கொள்ள தந்தை எப்போதும் ஆயத்தமாய் இருக்கிறார். நாம் செய்ய வேண்டியது என்ன? நமது பாவத்திற்கான தண்டனையை கிறிஸ்து ஏற்கனவே சிலுவையில் அனுபவித்து விட்டதையும் அவர் உயிரோடு எழுந்ததையும் விசுவசித்து நம் பாவங்களை உண்மையான மனம் திரும்புதலோடு அறிக்கையிட்டு அவரை நம் உள்ளத்திற்குள் வரவழைப்பதை எதிர்பார்த்து அவர் ஆவலாக காத்துக் கொண்டிருக்கிறார்(திவெ 3:20). இப்படிப்பட்ட உண்மையான உறவுக்குள் வந்தவர்கள் தொடர்ந்து அந்த உறவை பேணி காக்க வேண்டும். அதற்கு என்ன செய்வது என்று தான் சென்ற இதழில் எழுத தொடங்கி இருந்தேன். கடவுளோடு நேரம் செலவழித்து, இறை வார்த்தைகளை வாசித்து, தியானித்து, அதற்குக் கீழ்ப்படிந்து, நமது வாழ்வை அடிக்கடி ஆராய்ந்து, உறவுக்கு தடையாக வரக்கூடிய பாவங்களை அறிக்கை யிட்டு, பாவ மன்னிப்பு பெற்று, விட்டு விட வேண்டும். அவருடனான உறவு, நமது மற்ற உறவுகளையும் சீர்படுத்துகிறது என்பதையும் மறந்து விடக்கூடாது.

முழு திருவிவிலியத்தையும் தொடர்ந்து, முறையாக, தியானிப்பது நல்லது. தியானிக்கத் தொடங்கும் முன்பு திருவிவிலியத்தின் ஆசிரியரான தூய ஆவியானவர் கடவுளின் வார்த்தையை நாம் விளங்கிக் கொள்ள உதவும்படியும், அந்த இறை வார்த்தைகளின் வழி நம்மோடு பேசும்படியும் இறைவேண்டல் செய்ய வேண்டும். திருப்பாடல் ஆசிரியர் செபிப்பது போல் "உம் திருச்சட்டத்தில் வியப்பானவற்றை நான் கண்டுணருமாறு என் கண்களை திறந்தருளும்" (திபா 119:18) என்று செபித்து தொடங்க வேண்டும்.

திருவிலியத்தில் ஒரு நூலை வாசிக்கின்ற எதிர்பார்ப்போடு அல்ல, உண்மையாகவே குரலை அதாவது இறை குரலை கேட்கின்ற எதிர்பார்ப்போடு அணுக வேண்டும் என்று ஜேக். மேகாஹால் என்ற இறையியல் அறிஞர் கூறுகிறார்.

திருவிவிலியத்தை ஒழுங்காக முறையாக தொடர்ச்சியாக வாசிக்க வேண்டும். திடீரென்று திறந்து ஏதாவது ஒரு பகுதியை எடுத்து வாசிப்பது நல்லதல்ல. அது நல்ல பழக்கமும் அல்ல. அவசரவாசிப்பும் நல்லதல்ல. பலர் ஏதாவது ஒரு பகுதியை வாசிப்பது, செபிப்பது என்ற பழக்கத்திற்கு தள்ளப்பட்டு இருக்கிறார்கள். கடவுள் நம்மோடு பேச வேண்டும் என்ற செபத்தோடும், வாஞ்சையோடும், எதிர்பார்ப்போடும் மெதுவாக தியானத்தோடு வாசிக்க வேண்டும்.

அப்படி வாசித்த பகுதியை தியானிக்க வேண்டும். "இந்த திருச்சட்ட நூலை உன் முன்னின்று அகற்றாதே. இரவும் பகலும் இதனை தியானம் செய்து இதில் எழுதியுள்ள அனைத்தையும் கடைபிடிப்பதில் கவனமாய் இரு. அப்பொழுதுதான் நீ செல்லும் இடமெல்லாம் நலம் பெறுவாய், வெற்றி காண்பாய்"(யோசு 1:8)என்று திருவிவிலியம் கூறுகிறது. "நற்பேறு பெற்றவர்கள் ஆண்டவரின் திருச்சட்டத்தில் மகிழ்ச்சியுறுபவர். அவரது சட்டத்தைப் பற்றி இரவும் பகலும் சிந்திப்பவர்'' (திபா 1:2)என்று திருப்பாடலாசிரியர் கூறுகிறார். தியானம் என்றால் அசைபோடுதல் என்பதை உணர்ந்திருக்கிறோம். தொடர்ந்து தியானிப்போம்.
உறவிலும் பணியிலும் உங்களோடு பயணிக்கும்

உங்கள் சகோதரன்
நற்பணி **அ. சகாயராஜா**

## நவம்பர் 2024 புதிய பணியாளர்கள் பயிற்சி

- சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர் பயிற்சி - I பரமக்குடி அருள்சான்று நிலையத்தில் 3.11.2024 அன்று நடைபெற்றது. 4 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி A. சகாயராஜா, நற்பணி K. ஜஸ்டீன் கபிரியேல் ஆகியோர் வழிநடத்தினார்கள்.
- சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர் பயிற்சி - II காளையார்கோவில். தந்தை. ஜோசப் சேவியர் அரங்கில் 3.11.2024 அன்று நடைபெற்றது. 7 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி A. சத்தியேந்திரன் நற்பணி A. பிரான்சிஸ் சேவியர், நற்பணி P. சகாயராணி ஆகியோர் வழிநடத்தினார்கள்.
- சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர் பயிற்சி - III தங்கச்சிமடம், புனித குழந்தை தெரசாள் கோவிலில் 9.11.2024 அன்று நடைபெற்றது. 7 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை  நற்பணி J. மேரிபுஷ்பம். செயலர் ஆகியோர் வழிநடத்தினார்கள்.
- சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர் பயிற்சி - IV இராமநாதபுரம். புனித செபமாலை அன்னை கோவிலில் 10.11.2024 அன்று நடைபெற்றது. 5 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி J. மேரிபுஷ்பம். நற்பணி பெ. தெரசா மிரண்டா. ஆகியோர் வழிநடத்தினார்கள்.
- சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர் பயிற்சி - V சிவகங்கை. வியான்னி அருள்பணி மையத்தில் 10.11.2024 அன்று நடைபெற்றது. 7 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி M சகயாமேரி, நற்பணி G.M.S. ராணி, நற்பணி A. யூஜின் அமல்ராஜ் ஆகியோர் வழிநடத்தினார்கள்.
- சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர் பயிற்சி VI ஓரியூர் புனித அருளானந்தர் திருத்தலத்தில் 10.11.2024 அன்று நடைபெற்றது. 10 பேர் கலந்து கொண்டனர்.இப்பயிற்சியை நற்பணி M. மரிய கிரகோரி, நற்பணி S. மோட்ச அலங்காரம், நற்பணி இரா. அருள்பிரகாசம் ஆகியோர் வழிநடத்தினார்கள்.
- சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர் பயிற்சி VII அமைதியகம். காயாவயலில் 17.11.2024 அன்று நடைபெற்றது. 14 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை. நற்பணி S. சகாயராணி. நற்பணி J. அருள் இளங்கோ நற்பணி S.அமலோற்ப ஆரோக்கியராணி ஆகியோர் வழிநடத்தினார்கள்.
- சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - VIII சாயல்குடி. புனித ஆரோக்கிய அன்னை கோவிலில் 17.11.2024 அன்று நடைபெற்றது. 11 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி M. மரிய கிரகோரி, நற்பணி M. அருள் மரிய நாயகம், நற்பணி A. சந்திரபுஷ்பா ஆகியோர் வழிநடத்தினார்கள்.
- சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - IX இராசசிங்கமங்கலம். தூய ஆவியார் ஆலயத்தில் 24.11 2024 அன்று நடைபெற்றது. 15 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி S. மோட்ச அலங்காரம். நற்பணி S.பால்ராஜ். நற்பணி S. தைனேஸ்மேரி ஆகியோர் வழிநடத்தினார்கள்.

## நவம்பர் 2024 கடந்த மாதச் செயல்பாடுகள்

06.11. 2024 அன்று காயாவயல் அமல அன்னை அமைதியகத்தில் அருளமுது ஆதாரக் கூடுகை நடைபெற்றது. 29 பேர் இணைந்து செபித்த இவ்வழிபாட்டை நற்பணி விசுவாசம். நற்பணி சகாயராணி. நற்பணி தைனேஸ்மேரி ஆகியோர் வழிநடத்தினார்கள்.

06.11.2024 அன்று பரமக்குடி அருள்சான்று நிலையத்தில் அருளமுது ஆதாரக் கூடுகை நடைபெற்றது. 62 பேர் இணைந்து செபித்த இவ்வழிபாட்டை நற்பணி V. செங்கோல்மேரி, நற்பணி தை. பாத்திமா ராணி, நற்பணி மி. மனுவேல்தாஸ் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

8.9&10.அக்டோபர் 2024 ஆகிய நாட்களில் அருள்சான்று நிலையத்தில் ஆண்டுத்தியானம் VIII நடைபெற்றது. செய்தியாளர் அருள்தந்தை கிரேஸிஸ் மைக்கேல் அவர்கள் செய்தி வழங்கி நெறிப்படுத்தினார்கள். 96 பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

9.11. 2024 அன்று சாயல்குடி பங்கு மேல முந்தல் கிராமத்தில் முத்துப்பேட்டை வட்டார பணியாளர்கள் நற்பணி வெர்ஜீனியா, நற்பணி மார்கஸ், நற்பணி ததேயுஸ் தொடர்களப்பணி ஆற்றினார்கள்.

23.11.2024 அன்று தேவகோட்டை புனித சகாய அன்னை கோவிலில் நடைபெற்ற 2ஆம் வத்திக்கான் சங்க கொள்ளை திரட்டு குறித்த கருத்தரங்கில் 35 பணியாளர்கள் பங்கேற்றனர். அதே நாளில் திருச்சி மறைமாவட்ட பொதுநிலையினருக்கு நற்செய்திப்ப ணியாளர்கள் அறிமுகப்பயிற்சி திருச்சி அருங்கொடை மையத்தில் நடைபெற்றது. இப்பயிற்சியை செயலர் நெறிப்படுத்தினார்.

24.11. 2024 அன்று அஞ்சுக்கோட்டை பங்கு சின்ன அஞ்சுக்கோட்டை கிராமத்தில் தொடர் களப்பணி நடைபெற்றது. இதில் சி.கே. வட்டாரப் பணியாளர்கள் களப்பணி ஆற்றினார்கள்.

26.11.024 முதல் 29.11.2024 ஆகிய நான்கு நாட்கள் எம்மாயூஸ் ஆன்மீக மையத்தில் நடைபெற்ற கூட்டியக்க ஆன்மீகம் கருந்தரங்கில் 5 பணியாளர்கள் பங்கேற்றனர்.

30.11. 2024 & 1.12.2024 ஆகிய இருநாட்களில் வட்டார கண்காணிப்பளர்களுக்கான பணித் தலைமைத்துவ பயிற்சிப் பட்டறை பூண்டி மாதா தியான இல்லத்தில் நடைபெற்றது. 30 பேர் கலந்து கொண்ட இப்பயிற்சியை அருள்பணி ரெடால்ப் CMF மதுரை வழிநடத்தினார்கள்.

## நவம்பர் 2024 வட்டாரத் தியானக் கூட்டங்கள்

**இராமேஸ்வரம் வட்டாரம் :**

இராமேஸ்வரம் வட்டாரத் தியானக் கூட்டம் 16.11.2027 சனிக்கிழமையன்று நற்பணி மரிய மேகலா அவர்கள் இல்லத்தில் நடைபெற்றது. நற்பணி ஆ. விசுவாசம் தொடர்பாளராக கலந்து கொண்டு நற்செய்திப் பணியாளராகிய நான் வெற்றி வாழ்க்கை வாழ்கிறேனா? என்ற தலைப்பில் செய்தி வழங்கி நெறிப்படுத்தினார். 19 பணியாளர்களில் கலந்து கொண்டனர்.

நற்பணி **அந்தோணியாம்மாள்**.வட்டாரக் கண்காணிப்பாளர்.

**ஆர்.எஸ் மங்கலம் வட்டாரம் :**

ஆர்.எஸ் மங்கலம் வட்டாரத் தியானக் கூட்டம் 00.11.2024 அன்று பிச்சங்குறிச்சி நற்பணி சாந்தி இல்லத்தில் நடைபெற்றது. நெறியாளராக நற்பணி சகாயராஜா கலந்து கொண்டு நான் வெற்றி வாழ்க்கை வாழ்கிறேனா? என்ற தலைப்பில் செய்தி வழங்கினார்கள். 20 பணியாளர்கள் கலந்துகொண்டனர்.

நற்பணி S. **தைனஸ் மேரி**. வட்டாரக் கண்காணிப்பாளர்

**ஆவுடைப் பொய்கை வட்டாரம் :**

ஆவுடைப்பொய்கை வட்டாரத் தியானக் கூட்டம் 17.11.2024 அன்று நற்பணி ஆ. ரூபி வில்லியம் இல்லத்தில் நடைபெற்றது. தொடர்பாளராக நற்பணி J. ஆரோக்கியசாமி

கலந்து கொண்டு நற்செய்திப் பணியாளராகிய நான் வெற்றி பெற்ற வாழ்க்கை வாழ்ந்த இருக்கின்றேனா? என்ற மையச்சிந்தனையில் இறைச்செய்தி வழங்கினார். 19 பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

நற்பணி S. **வில்லிம்ஸ் செபஸ்தியான்.** வட்டாரக் கண்காணிப்பாளர்

**மானாமதுரை வட்டாரம் :**

மானாமதுரை வட்டாரத் தியானக் கூட்டம் 17.11.2024 ஞாயிறு சிறுமலர் கூடத்தில் நடைபெற்றது. நெறியாளராக செயலர் கலந்துகொண்டு வெற்றி பெற்ற வாழ்வு வாழ்கிறேனா? என்ற மையச்சிந்தனையின் அடிப்படையில் செய்தி வழங்கி நெறிப்படுத்தினார். 32 பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

நற்பணி I. **புஷ்பராஜ்** . வட்டாரக் கண்காணிப்பாளர்

**பாம்பன் வட்டாரம் :**

பாம்பன் வட்டார தியானக் கூட்டம் 16.11.24 சனிக்கிழமை தூய சவேரியார் கோவிலில் நடைபெற்றது. ."நற்செய்திப் பணியாளராகிய நான் வெற்றி வாழ்க்கை வாழ்கிறேனா?" என்னும் தலைப்பில் தொடர்பாளர் செய்தி வழங்கினார். 20 பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

நற்பணி.**அ.சத்தியேந்திரன்.** தொடர்பாளர்.

**சருகணி வட்டாரம் :**

சருகணி வட்டாரத் தியானக் கூட்டம் 03.11..24 ஞாயிற்றுக் கிழமை சருகணி புனித பவுல் பள்ளியில் வட்டாரப் பணியாளர்களின் தொடக்க வழிபாட்டுடன் ஆரம்பமானது. 27 பணியாளர்கள் பங்கேற்ற இத்தியானத்தை"வெற்றி வாழ்வு வாழ்கிறேனா?" என்ற தலைப்பில் செயலர் தொடர்பாளராகக் கலந்து கொண்டு செய்தி வழங்கி நெறிப்படுத்தினார்கள்.

நற்பணி **லூயி ஆரோக்கியசாமி,** வட்டாரக் கண்காணிப்பாளர்.

**தங்கச்சிமடம் வட்டாரம் :**

தங்கச்சிமடம் வட்டாரத் தியானக் கூட்டம் 16.11.24 அன்று புனித சூசையப்பர் கோவிலில் நடைபெற்றது. தொடர்பாளராக நற்பணி கிரகோரி கலந்துகொண்டு நான் வெற்றி வாழ்க்கை வாழ்கிறேனா? என்ற தலைப்பின் செய்தி வழங்கினார். 27 பணியாளர்கள் கலந்து கொண்டனர்

நற்பணி X. **லூர்துமேரி,** வட்டாரக் கண்காணிப்பாளர்.

**சாயல்குடி வட்டாரம் :**

சாயல்குடி வட்டாரத் தியானக் கூட்டம் 24.11.24 அன்று மூக்கையூர் புனித சந்தியாகப்பர் கோவிலில் நடைபெற்றது. 32 பணியாளர்கள் கலந்து கொண்ட இத்தியானத்தை நற்பணி M. மரிய கிரகோரி தொடர்பாளராக கலந்துகொண்டு நான் வெற்றி வாழ்க்கை வாழ்கிறேனா? என்ற மையச்சிந்தனையில் செய்தி வழங்கினார்.

நற்பணி A. **சந்திரபுஷ்பா,** வட்டாரக் கண்காணிப்பாளர்.

**இடைக்காட்டூர் வட்டாரம் :**

இடைக்காட்டூர் வட்டாரத் தியானக் கூட்டம் 24.11.24 அன்று அருளானந்தபுரம் புனித அன்னாள் கோவிலில் நடைபெற்றது. செயலர் தொடர்பாளராக கலந்துகொண்டு எனது வாழ்வு வெற்றி வாழ்வா? என்ற மையச்சிந்தனையில் செய்தி வழங்கினார். 29 பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

நற்பணி M. **சேவியர்,** வட்டாரக் கண்காணிப்பாளர்.

# ஆடுகளுக்கு வாயில் நானே

எலியாவின் கடவுளாகிய ஆண்டவர் எங்கே இருக்கிறார்? (2 அர 2:14). இறைவாக்கினர் எலியாவைப் பற்றி அதிகம் கேள்விப்பட்டிருக்கிறோம். விவிலியத்தில் வாசித்தும் அறிந்திருக்கிறோம். எலியா என்றால் யாவே என்பது பொருள். அவரது பெயருக்குத் தக்கவாறு அவர் செயல்பட்டார். எலியா நம்மைப் போன்ற எளிமையான மனிதர்தான் என்று யாக்கோபு குறிப்பிடுகிறார் (யாக் 5:17). ஆனால் அவர் மழை பெய்யக் கூடாது என்று உருக்கமாக இறைவனிடம் வேண்டினார். மூன்று ஆண்டு ஆறு மாதம் மழை இல்லாது போயிற்று. மீண்டும் அவர் இறைவனிடம் வேண்டினார். வானம் பொழிந்து; நிலம் விளைந்தது. அது மட்டுமல்ல. இஸ்ரயேல் மக்கள் கடவுள் மீது நம்பிக்கையற்ற நிலையில் நிற்கும்போது ஒருமுகப்படுத்தி கடவுள் பக்கமாக அவர்களைத திருப்பினார். இஸ்ரயேல் மக்களின் நம்பிக்கை வாழ்வுக்கு சவாலாக இருந்த பாகாலின் போலி இறைவாக்கினர்களையும் ஒரே இடத்தில் அழைத்து வானத்திலிருந்து நெருப்பு இறங்கி வரச் செய்து யாவே இறைவன் ஒருவரே உண்மையான கடவுள் என்பதை நிரூபித்து அதன் வழியாக பாகாலின் போலி இறைவாக்கினர் நானூற்று ஐம்பது பேரையும் ஒரே நேரத்தில் அழித்து கடவுளின் திருப்பெயரை மாட்சிபடுத்தினார். அவர் நம்மைப் போன்ற எளிமையாக இருந்தாலும் அவர் கடவுள்பெயரால் ஆற்றிய வல்ல செயல்கள் இன்றும் நம்மை மெய் சிலிர்க்கச் செய்கின்றன.

கடவுளின் ஆவியானவர் அவரோடு இருந்ததால் ஆளும் அரசர்களைக் கண்டு அஞ்சவில்லை. கடவுளினட வார்த்கைளை துயிவுடன் எடுத்துக் கூறி கடவுளை மட்டுமே மாட்சிபடுத்தினார். புதிய ஏற்பாட்டிலும் எலியாவை மிகவும் முக்கியமான இடத்தில் அதாவது ஆண்டவர் இயேசுவின் தோற்றமாற்ற. மலையில் மோசேயோடும் ஆண்டவர் இயேசுவுடனும் இணைந்து மாட்சியுடன் தோன்றி எருசலேமில நிறைவேறவிருந்த ஆண்டவருடைய இறப்பைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார் (லூக் 9:30-31). எலியா தனது அழைப்பின் மேன்மையை அறிந்திருந்தார். இது ஒரு தொடர் மீட்புப் பணி என்பதை உணர்ந்தவர் தனக்குப் பின்னும் இது தொடர வேண்டும் என்பதற்காக எலிசா என்பவரைக் கடவுளின் ஆலோசனைப்படி தனது சீடராக தேர்வு செய்தார். இந்த எலிசாவுக்கு தனது தலைவருடன் இருப்பதே அவருக்கு விருப்பமாக இருந்தது. ஒரு முறை எலியா எலிசாவிடம் ஆண்டவர் என்னை பெத்தேலுக்கு அனுப்பியுள்ளார். எனவே நீ இங்கேயே தங்கியிரு என்றார். ஆனால் எலிசா அவரை நோக்கி வாழும் ஆண்டவர் மேல் ஆணை! உம் உயிர்மேலும் ஆணை! நான் உம்மை விட்டுப் பிரியமாட்டேன் என்றார். பின்பு இருவரும் இணைந்தே பெத்தேழுக்குச் சென்றார்கள். பின்பு எலியா ஆண்டவர் என்னை எரிகோவுக்கும் பின்பு யோர்தானுக்கும் அனுப்பியுள்ளார். நீ இங்கேயே தங்கியிரு என்றார். ஆனால் எலிசா இம்முறையும் உம்மை விட்டுப் பிரியமாட்டேன் என்று ஆணையிட்டுக் கூறினார். எலியா நம்மைப் போன்றவராக இருந்தாலும் அவருக்குள் இருந்த இறை ஆற்றலை எலிசா கண்டுகொள்கிறார். எனவேதான் நான் உம்மோடுதான் இருப்பேன் உம்மைவிட்டுப் பிரியமாட்டேன் என்று தனது தலைவருடன் மிகவும் நெருங்கிய உறவில் இருந்தார். அவர்கள் யோர்தான் நதிக்கரையில் நின்றபோது எலியா தனது போர்வையை சுருட்டி தண்ணீரை அடிக்க அது இருபுறமும் பிரிந்து

சென்றது. இருவரும் உலர்ந்த தரைமீது நடந்து நதியைக் கடந்தனர். தன்னோடு இருப்பவருக்கு தான் ஏதாவது செய்ய வேண்டும் என்ற எண்ணம் எலியா உள்ளத்தில் தோன்ற அவர் எலிசாவிடம் நான் உன்னிடமிருந்து பிரிந்து செல்ல நேர்ந்தால் நான் உனக்கு என்ன செய்ய வேண்டும் என்று கேட்டார். உடனே உமது ஆவி என் மீது இரு மடங்காக இருப்பதாக என்று கேட்டுக் கொண்டார். ஆனால் எலியா அது மிகவும் கடினமானது என்றார். அவர்கள் இவ்வாறு உரையாடிக் கொண்டு நடந்து செல்கையில் எதிர்பாராத வகையில் இதோ நெருப்புத் தேர்களும். நெருப்புக் குதிரைகளும் திடீரென நடுவே வந்து அவர்கள் இருவரையும் பிரித்தன. எலியா சூழற்காற்றில் விண்ணகத்திற்கு சென்றார். எலிசா அதைக் கண்டு மிகவும் மனம் கலங்கினார். குழந்தை தாயைப் பறிகொடுத்தது போல செய்வதறியாது எலியாவைப் பார்த்து என் தந்தாய் என் தந்தாய் இஸ்ரயேலின் தேரே அந்தத் தேரின் பாகனே என்று கதறினார். அதற்கு மேல் அவரால் எலியாவைக் காணமுடியவில்லை. சற்று நேரம் என்ன செய்வதென்று தவித்த அவருக்கு இந்த யோர்தான் நதியைக் கடந்தால் தான் இருந்த இடத்திற்கு போகமுடியும் என்ற எண்ணத்தோடு இது எப்படி ஆகும் என்று போராட்டம் எழுந்தது. நாம் அங்கு இருந்திருந்தால் எலியாவுக்கு ஒரு உருவத்தைச் செய்து அதை வழிபட ஆரம்பத்திருப்போம். ஆனால் எலிசா ஒரு சரியான தீர்மானம் எடுக்கிறார். நாம் இனி எலியாவைத் தேடுவதில் பயனில்லை. அவருக்குள்ளிருந்து மிகவும் வல்லமையாய் செயல்பட்ட எலியாவின் கடவுளைத் தேடுவோம். அவரால் மட்டுமே என்னை இந்த நதியிலிருந்து கரை சேர்க்க முடியும் என்பதை உணர்ந்து எலியா வழிபட்ட கடவுள்மீது தனது முழு நம்பிக்கையும் வைத்து எலியாவிடமிருந்து விழுந்த போர்வையை கையில் எடுத்துக் கொண்டு எலியாவின் கடவுளாகிய ஆண்டவர் எங்கே இருக்கிறார் என்றுக் கூறிக் கொண்டே போர்வையினால் தண்ணீரை அடித்தார். அது இரண்டாகப் பிரிந்தது. எலிசா அக்கரைக்கு சென்றார் (2 அர 2:11-14). எலியா தனக்குச் சீடராக இருந்த எலிசாவுக்கு முன்பாகத் தன்னை முன்னிலைப்படுத்தவில்லை. ஒவ்வொரு செயல்களிலும் தன்னை மறைத்துக் கொண்டு கடவுளை மட்டுமே மாட்சிபடுத்தினார். தனக்குப் பின் தனது சீடர் தன்னைப போல உண்மையான கடவுளை கண்டு கொள்ளவேண்டும் என்று எல்லா நிலையிலும் எலிசாவுக்கு முன் மாதிரியாக வாழ்ந்து காட்டினார். எனவேதான் எலியா தன்னை விட்டு பிரிந்தவுடன் எலியாவின் கடவுளாகிய ஆண்டவர் எங்கே என்று அவரைத்தேட ஆரம்பித்தார். அதன்பின்பு எலியா செய்ததைவிடப் பல அரும் செயல்களை செய்து எலிசா செய்து கடவுளின் திருப்பெயரை மாட்சிபடுத்தினார். இன்றைக்கு நாம் எந்த நிலையில் இருக்கிறோம்? கிறிஸ்து பிறப்பு நினைவு விழாவைக் கொண்டாட இருக்கின்ற இந்த நாள்களில் நம்மோடு பழகுகிற நம் அண்டை வீட்டாருக்கு நாம் வழிபடுகின்ற கொண்டாடுகின்ற இயேசுவை அறியச் செய்ய ஏதாவது வழி உண்டா? அல்லது வெறும் குடில்களை உருவாக்குவதில் பெருமைகொள்ளப் போகிறோமா? இயேசு கிறிஸ்து நமக்கு மட்டும் அல்ல.. அனைவருக்கும் ஆண்டவர் என்று தூய ஆவியானவர் கூறுகிறார் (1 கொ 1:3) எலியா நம்மைப் போன்ற எளிமையான மனிதராக இருந்தாலும் தம்மோடு இருந்த எலிசாவுக்கு உண்மையான கடவுளை அறியச் செய்தார். நாமும் அத்தகைய ஆர்வமுடையவர்களாய் செயல்படுவோம்.



புனித லூசியா கி.பி.304-ஆம் ஆண்டில் சிராக்யூஸ் நகரில் மறைசாட்சியாக மாண்டவர். தியோக்ளீசியன் காலத்தில் இது நிகழ்ந்திருக்கலாம். திருச்சபை முழுவதிலும் இரவது பக்தி விரைவில் பரவியது. தொடக்கத் திருச்சபையிலிருந்தே இந்தப் பக்திக்கு ஆதாரம் கிடைத்துள்ளது. உரோமை திருவழிப்பாட்டு முறையில் அமைந்துள்ளவை என்று சொல்லப்படும் 'பூசையின் மாறாத செபங்களின் தொகுப்பில்' இவரது பெயர் சேர்க்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. கி.பி. 1204-ஆம் ஆண்டிலிருந்து அவரது கல்லறை கண்டுபிடிக்கப்பட்டு புனிதமாகக் கருதப்பட்டு வருகிறது.

லூசியாவின் தாய் இரத்தப் பெருக்கினால் வேதனைப்பட்டார். இதனால் தாயும் மகளுமாகக் கட்டோனியாவுக்குத் திருப்பயணம் சென்றனர். புனித ஆகத்தாவின் கோவில் அங்குள்ளது. இருவரும் அங்கு உருக்கமாக மன்றாடினர். லூசியாவுக்கு அன்றிரவு கனவில் ஆகத்தா தோன்றினார். "உன் தாய்க்குத் தேவையான உடல் நலனைப் பெற்றுக்கொடுக்க உன் மன்றாட்டே போதுமானதாய் இருக்கும்போது. என்னிடம் ஏன் கேட்கிறாய்? உன் கற்பென்னும் லீலிமலரைக் கொண்டு இறைவனுக்கேற்ற இல்லிடம் தயாரித்துள்ளாய். உனது விசுவாசமே உனக்கு இப்போது உதவுவதற்குப் போதுமானது" என்றார். தாயும் நலம் அடைந்தார்.

அப்போது தம் உடைமைகளை ஏழைகளுக்குத் தானமாக அளிப்பேன் லூசியா அத்தலத்திலேயே தாயிடம் விடைபெற்றார். மீண்டும் சிராக்யுசக்குத் திரும்பினார். வாக்களித்ததுபோல் உடைமைகளைப் ஏழைகளுக்கு பகிர்ந்தளித்தார். இளைஞன் ஒருவன் ஏற்கனவே இவரை மணந்துகொள்ள முயற்சிகள் பல செய்திருந்தான். பழிவாங்கும் எண்ணத்துடன். "இவர் கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்தவர்" என்று உயர் அலுவலரிடம் குற்றம் சாட்டினான். "உன்னை அடித்து நொறுக்கும்போது உனக்குப் பேசுவதற்குக்கூட நா எழாது" என்றான். அதற்கு லூசியா "இறையடியாள் நான். சரியான சொற்களைச் சரியான நேரத்தில் சொல்லத் தூய ஆவியார் துணை நிற்பார். ஏனெனில் தூய வாழ்வு வாழ்வோர் யாவரும் தூய ஆவியின் கோவில்" என்றார். இதைக் கேட்டு அலுவலர் ஆவேசமடைந்தான். ஆனால் அவரையோ அசைக்க இயலவில்லை. அவர்மேல் காய்ச்சிய தார் எண்ணெயை ஊற்றினார். அவருக்குத் தீங்கிழைக்கவில்லை. மேலும் ஆத்திரம் அடைந்தவர்களாய் அவரது தொண்டையில் ஒரு வாளைப் பாய்ச்சினார்கள். இவ்வாறு மறைசாட்சி முடிபெற்று நம் மங்கை தூய வாயிலை அடைந்தார்.

''பல வேளைகளில் துன்புறுத்தவோரிடமிருந்து நாம் அடைகின்ற வேதனைகளில்தான் கிறிஸ்துவை மிக உறுதியாகக் கண்டடைய முடிகிறது''

நற்பணி **செங்கோல்மேரி,** காளையார்கோவில்

**வித்தியாசமான எண்களும் அத்தியாவசியமான இறைவார்த்தைகளும்**

| | |
|---|---|
| மனிதர் அப்பத்தினால் மட்டுமல்ல, மாறாக.<br>கடவுளின் வாய்ச்சொல் ஒவ்வொன்றாலும் வாழ்வர் . | **மத்தேயு 4:4** |

# ஒரு பணியாளரின் மன்றாட்டு



எங்களுக்கு நிறைவாழ்வு தருவதற்காக இந்த புவியில் அவதரித்தவரே இறைவா! உமது பிறப்பு விழாவைக் கொண்டாட பல் வகையில் தயாரித்துக் கொண்டிருக்கும் நாங்கள், கடவுள் மனிதர் மீது கொண்ட அளவற்ற அன்பினால்தான் இந்த நிகழ்வு என்பதால் அந்த அன்பினை நினைவு கூறவும்.நீர் எங்களோடு கூடவே இருப்பதற்காக பிறந்தீர் என்றும் எங்களோடு இருக்கிறீர் என்பதை நினைவில் இருத்தவும். பாவங்களில் இருந்து விடுதலை தந்து மீட்க வந்தீர் என்பதை மறக்காமல் பாவ மன்னிப்பின் நிச்சயத்தைப் பெற்றுக்கொள்ளவும் எங்களைத் தயாரிக்கும் மன நிலை தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறேன்.

## டிசம்பர் 2024 வட்டாரத் தியானக் கூட்டம்

| வ.எ | தேதி | வட்டாரம் | தொடர்பாளர் |
|---|---|---|---|
| 1 | 08 | காளையார்கோவில்<br>9444712047 | நற்பணி M. மரிய கிரகோரி<br>9486965799 |
| 2. | 08 | கமுதி<br>9443210772 | செயலர்<br>9787967272 |
| 3. | 08 | மகிண்டி மிக்கேல்பட்டணம்<br>9524495693 | நற்பணி A. சத்தியேந்திரன்<br>6379405762 |
| 4. | 24. | புதுக்கோட்டை<br>787733750 | நற்பணி M. மரிய கிரகோரி<br>9486965799 |
| 5 | 15 | பரமக்குடி<br>9443503294 | நற்பணி L. ஆரோக்கியசாமி<br>9150579311 |
| 6. | 15 | C.K. மங்கலம்<br>9626303365 | செயலர்<br>9787967272 |
| 7. | 15 | சாலைகிராமம்<br>8526754557 | நற்பணி GMS. ராணி<br>9655264448 |
| 8. | 22 | செஞ்சை<br>9442758641 | நற்பணி A. தனிநாயகம்<br>9486037889 |
| 9. | 22 | இராம்நகர்<br>9442959569 | நற்பணி J. ஆரோக்கியசாமி<br>8248899427 |
| 10. | 22 | செக்காலை<br>9150579311 | நற்பணி A. சகாயராஜா<br>7010407853 |
| 11. | 22 | சிவகங்கை<br>9943165532 | செயலர்<br>9787967272 |
| 12. | 29 | இராமநாதபுரம்<br>9486037889 | நற்பணி M. சேவியர்<br>9442857812 |
| 13. | 29 | முத்துப்பேட்டை<br>9940745169 | நற்பணி A. சகாயராஜா<br>7010404853 |

**நற்செய்திப் பணிக்குழுவின் இணைய தளம்** www.arulchandrunilayam.org

# கடவுளின் விருப்பம்

1) எல்லா மனிதரும் மீட்புப் பெறவும் உண்மையை அறிந்துணர்வும் வேண்டுமென கடவுள் விரும்புகிறார். (1 திமோ 2:4) எல்லாவற்றைக் காட்டிலும் சிகரமாய் இருப்பது ஆண்டவரை அறியும் அறிவைப் பெறுவதே. அதாவது, ஆண்டவரின் மீட்புத் திட்டத்தை அறிந்து, அனுபவித்து அதை அறிவிக்க அழைக்கப்பட்டிருக்கிறோம். இது நம்மைக் குறித்த கடவுளின் விருப்பமாக இருக்கிறது. "ஒருவர் கூட நெறிதவறிப் போகக் கூடாது என்பதே உங்கள் விண்ணகத் தந்தையின் விருப்பம்" (மத் 18:14) என்கிறார் இயேசு ஆண்டவர். ஆகவே, நம்முடைய அழைப்பை அலட்சியம் செய்துவிடக் கூடாது.

அ. கடவுளின் திருமுன் என்றென்றும் பணி செய்யும்படி ஏலி அழைப்புப் பெற்றிருந்தார். ஆனால், அவர் கடவுளின் விருப்பத்தை நிறைவேற்றத் தவறியபோது அவருடைய முழுக்குடும்பத்தின் மீதும் கடவுளின் சாபம் வந்தது. ஆகவே, கடவுள் ஏலியைத் தள்ளி, அவர் திட்டத்திற்கும் விருப்பத்திற்கும் ஏற்பச் செயல்படும் நம்பிக்கைக்குரிய சாமுவேலைத் தேர்ந்து கொண்டார் (1 சாமு 2:35).

எல்லாச் சூழ்நிலையிலும் நன்றி கூறுவதே கடவுளின் விருப்பம் (1 தெச 5:18)

ஆ) பென்யமின் குலத்தைச் சேர்ந்த கீசுவின் மகன் சவுல் நினையாத போதும், ஆண்டவர் அவரை இஸ்ரயேலின் அரசராக்கினார். அழைக்கப்பட்ட சவுல் இறை விருப்பத்தை நிறைவேற்றத் தவறியபோது, கடவுள் சவுலை நீக்கிவிட்டு தாவீதை அரசராக ஏற்படுத்தினார். அவரைக் குறித்து ஏசாயின் மகனான தாவீதை என் இதயத்துக்கு உகந்தவனாகக் கண்டேன். என் விருப்பம் அனைத்தையும் அவன் நிறைவேற்றுவான் என்று சான்று பகிர்ந்ததோடு, தாம் அளித்த வாக்குறுதியின்படியே கடவுள் அவருடைய வழி மரபிலிருந்தே இஸ்ரயேலுக்கு இயேசு என்னும் மீட்பர் தோன்றச் செய்தார் (திப 13:22, 23).

2) இயேசுவின் மீது நம்பிக்கை கொள்ளும் அனைவரும் நிலைவாழ்வு பெறவேண்டும் என்பதே கடவுளின் விருப்பம் (யோவா 6:40).

"அவர் என்னிடம் ஒப்படைக்கும் எவரையும் நான் அழியவிடாமல் இறுதிநாளில் அனைவரையும் உயிர்த்தெழச் செய்ய வேண்டும். இதுவே என்னை அனுப்பியவரின் விருப்பம். மகனைக் கண்டு அவரிடம் நம்பிக்கை கொள்ளும் அனைவரும் நிலைவாழ்வு பெற வேண்டும் என்பதெ என் தந்தையின் விருப்பம்" (யோவா 6:39,40). ஆக "என் சொந்த விருப்பத்தை நிறைவேற்ற அல்ல, என்னை அனுப்பியவரின் விருப்பத்தை நிறை வேற்றவே நான் விண்ணிலிருந்து இறங்கி வந்தேன்" (யோவா 6:38). "என்னை அனுப்பியவரின் விருப்பத்தை நிறைவேற்றுவதும் அவர் கொடுத்த வேலையைச் செய்து முடிப்பதுமே என் உணவு" (யோவா 4:34) என்று கூறி, தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றுவதையே இயேசு முதன்மைப்படுத்தினார்.

நமக்காக யாவையும் செய்த முடித்த இயேசுவின் மீது கொள்ளும் நம்பிக்கையால் மட்டுமே நாம் வாழ்வு பெறமுடியும். ஏனெனில், அவருடைய அருளால் நம்பிக்கையின் வழியாக மீட்கப்பட்டிருக்கிறோம். ஆகவே இது மனித செயல் அல்ல, இது கடவுளின் கொடை (எபே 2:8) சிலுவையில் இயேசு சிந்திய இரத்தத்தால், அமைதியை நிலைநாட்டவும், அனைத்தையும் அவர் வழி தம்மோடு ஒப்புரவாக்கவும் கடவுள் விருப்பம் கொண்டார் (கொலோ 1:20). எனவே அஞ்ச வேண்டாம். கடவுள் நம்மை அவரது ஆட்சிக்கு உட்படுத்த விருப்பம் கொண்டுள்ளார் (லூக் 12:32) .

3) எப்பொழுதும் மகிழ்சியாய் இருங்கள் இடைவிடாது இறைவனிடம் வேண்டுங்கள். எல்லாச் சூழ்நிலையிலும் நன்றி கூறுங்கள். உங்களுக்காகக் கிறிஸ்து இயேசு வாழியாய்க் கடவுள் வெளிப்படுத்திய விரும்பம் இதுவே (1 தெச 5:16-18). ஆகவே, ஒவ்வொரு மனிதனுடைய வாழ்விலும், தாழ்விலும், வறுமையிலும், வாதையிலும் இழப்பிலும் எல்லாச் சூழ்நிலைகளிலும் கடவுளுக்கு நன்றி சொல்லக் கற்றுக் கொள்ள வேண்டும். இதுவே கடவுளின் விருப்பமாக இருக்கிறது.

4) நீங்கள் தூயோராவதே கடவுளின் விருப்பம் (1 தெச 4:3) இப்பொழுது நீங்கள் தூயோராகவும் மாசற்றோராகவும் குறைச் சொல்லுக்கு ஆளாகாதரகவும் தம் முன் விளங்குமாறு ஊனுடல் எடுத்த தம் மகனது சாவின் வழியாகக் கடவுள் உங்களைத் தம்மோடு ஒப்புரவாக்கினார் (கொலோ 1:21,22) ஆகவே நீங்கள் தூயோராவதே கடவுளின் விருப்பம். பெரிய வரங்களையுடைய மனிதராக இருந்தாலும் "தூய்மை" இல்லையென்றால் கடவுளின் கோபத்திற்கு ஆளாக நேரிடும். (எ.கா) தாவீது கடவுளின் இதயத்துக்கு ஏற்றவர்தான். ஆனால், நடந்தது என்ன? விபசாரம் என்ற பாவத்தைச் செய்தபோது, அதை குறித்து மனம் வருந்தினார்.

> தூயோராவதே கடவுளின் விருப்பம் (1 தெச 4:3)

கடவுளிடம் மன்னிப்புக் கேட்டார், நோன்பு இருந்தார், செபித்தார், கடவுளின் தூய்மைக்குக் களங்கம் ஏற்படுத்திய காரணத்தால், அதைக் கடவுளால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. ஆகவே, பாவத்தால் பிறந்த குழந்தையைக் கடவுள் அழித்தார்.

மேலும், தாவீதின் மற்ற பிள்ளைகளின்மேலும், கடவுளின் சாபம் விழுந்தது. தாவீதின் மூன்றாவது மகன் அப்சலோமின் தங்கை தாமரை தாவீதின் இன்னொரு மகன் கற்பழித்தான். இதனால், அப்சலோம் அம்னோனைக் கொலை செய்தான். இப்படியாகத் தொடர்ந்து தாவீதின் குடும்பத்திலே கற்பழிப்பு, கொலை, அமைதியற்ற நிலை ஏற்பட்டது. ஏனென்றால், தூய ஆவியாரைப் பெற்ற தாவீது தன் தூய்மையைக் காத்துக் கொள்ளவில்லை. ஆகையால், ஆண்டவரின் கோபம் தாவீதின் முழுக்குடும்பத்தின் மீதும் விழுந்தது. 'கடவுள், நம்மை ஒழுக்கக் கேட்டிற்கு அல்ல, தூய வாழ்வுக்கே அழைத்தார்.

ஆகையால் ஆண்டவரே ஆண்டவரே எனச் சொல்வபரெல்லாம் விண்ணரசுக்குள் செல்வதில்லை. மாறாக விண்ணுலகிலுள்ள என் தந்தையின் விருப்பத்தின்படி செயல்படுபாவரே செல்வர் (மத் 7:21) என இயேசு திட்டவட்டமாக கூறுகிறார். தாங்கள் செய்த நற்செயல்களின் பொருட்டு விண்ணரசுக்குள் நுழைந்துவிடலாம் என்று எண்ணிக் கொண்டிருக்கும் பலர் அதில் நுழைய முடியாமல் போகலாம். விண்ணரசுக்குள் நுழையவே முடியாது என்று பரிதவித்துக் கொண்டிருக்கும் சிலர் அங்கு நுழைய வாய்ப்பு பெறலாம். இங்கு அவரவவர் விருப்பதிற்கு இடமில்லை ஆண்டவரின் விருப்பமே முக்கியம். இதை நாம் புரிந்து செயல்பட வேண்டும்.

ஆகவே, இந்த உலகப் போக்கின்படி ஒழுகாதீர்கள். மாறாக உங்கள் உள்ளம் புதுப்பிக்கப் பெற்று மாற்றம் அடைவதாக. அப்போது கடவுளின் விருப்பம் எது எனத் தேர்ந்து தெளிவீர்கள். எது நல்லது எது உகந்தது எது நிறைவானது என்பதும் உங்ளுக்குத் தெளிவாகத் தெரியும் (உரோ 12:2). ஆனாலும் நமது விருப்பத்தின்படி அல்ல. இறைவா! உமது ஆட்சி வருக! உமது விருப்பம் விண்ணுலகில் நிறைவேறுவது போல மண்ணுலகிலும் நிறைவேறுக! (மத் 6:10) என்று ஒவ்வொரு நாளும் கடவுளிடம் செபிப்போம்.

நற்பணி **ஆரோக்கியசாமி.ஜே**

# அன்னை மரியாளின் கேடயமான நம்பிக்கை

இறைவன் தனது மீட்புத்திட்டத்தினை செயல் படுத்தத் தொடங்கிய ஆறாவது மாதத்தில் கபிரியேல் வானதூதரை கலிலேயாவிலுள்ள நாசரேத்து என்னும் ஊரிலிருந்த ஒரு கன்னியிடம் அனுப்பினார் (லூக் 1:26). தூய ஆவியானவரின் வல்லமையால் நீர் கருவுற்று குழந்தையை பொறுவாய் என்று அறிவித்தார். முதலில் அஞ்சிய பின்னர் மரியா 'நான் ஆண்டவரின் அடிமை: உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்' என்றார். அப்போது வானதூதர் அவரை விட்டு அகன்றார் (லூக் 1:26-38).

கபிரியேலின் தூதுப்பணி இத்துடன் நிறைவுற்றது. அன்னை மரியாள் இறைவன் மீதும், அவரது உயிருள்ள வார்த்தைகள் மீதும் ஆழமான நம்பிக்கை கொண்டிருந்தார்.

இறைவன் மீதும் அவரது வார்த்தைகள் மீதும் நாம் கொள்ளும் உறுதியான ஏற்புடைமையே நம்பிக்கை (விசுவாசம்) ஆகும். மரியாள் இறைவன் மீதும் அவரது வார்த்தைகள் மீதும் கொண்ட ஆழமான நம்பிக்கையால்தான். 'ஆண்டவர் உமக்குச் சொன்னவை நிறைவேறும் என்று நம்பிய நீர் பேறு பெற்றவர்' (லூக் 1:45) என்ற உன்னத வாழ்த்தைப் பரிசாகப் பெற்றார். உன்னதரின் அன்னை ஆனார்.

இறைவன் மீது அசைக்க முடியா நம்பிக்கை கொண்ட அவர் இறைவனைப் போற்றிப் புகழ்ந்து பாடினார் (லூக் 1:48). மானிடப் பிறப்பின் மேன்மை நிறைந்த நிலையில் எப்பெருமையும் கொள்ளாது தன்னைத் தாழ்த்தி பணிந்து எலிசபெத்துக்கு மூன்று மாதகாலம் உதவி செய்து வீடு திரும்பினார்.

இறைவனைத் தனது கருவில் தாங்கியது முதல் சொல்லொணா வேதனைகளும் துன்பங்களும் அவரைத் தொடர்ந்தன. அத்தனை வேதனைகளையும் தனது மனதில் இருத்தி அதனைத் தாங்கி வாழும் வலிமையை தனது நம்பிக்கையால் பெற்றவரே கன்னியான அன்னை மரியாள். நாமும் துன்பங்கள் வேதனைகள் மத்தியில் அன்னை மரியாவைப்போல நம்பிக்கையை காத்துக் கொள்வோம்.

நற்பணி V.செபஸ்டியன் தார்சீஸ், செஞ்சை

---

**பைபிள் படி நடக்கிறாங்களாம்**



பாதர் : தம்பி மாற்கு 13 எடுப்பா

சிறுவன் : என்ன பாதர் இப்படி சொல்லீட்டிங்க?

பாதர் : இப்ப நான் என்னப்பா சொன்னேன்?

சிறுவன் : 35 மார்க்குக்கு கீழ எடுத்த நான் பெயிலாயிடுவன்ல....

****

பாதர் : ஏம்பா. கல்யாணத்துக்கு பின்னாடி அம்மா அப்பாவை விட்டுட்டு தனியா போயிட்டீங்களாமே?

கணவன் : பின்ன நான் பைபிள்படி நடக்க வேண்டாமா

பாதர் : என்னப்பா சொல்ற?

கணவன்: கணவன் தன் தாய் தந்தையை விட்டுவிட்டு மனைவியோடு ஒன்றித்திருப்பான். இருவரும் ஒரே உடலாய் இருப்பார்னு வாசித்திருக்கேன்ல....

# இது சாத்தியமா?

**சாரிபாத் கைம்பெண்:** வாழும் கடவுளாகிய ஆண்டவர் மேல் ஆணை! பானையில் கையளவு மாவும் கலயத்தில் சிறிதளவு எண்ணெயும் என்னிடம் உள்ளன. அப்பம் சுட்டு சாப்பிட்டபின் நானும் என் மகனும் சாகத்தான் வேண்டும்.

**எலியா :** அஞ்ச வேண்டாம். முதலில் எனக்கு அப்பம் சுட்டுக் கொண்டு வா. பின் உனக்கும் உன் மகனுக்கும் அப்பம் சுட்டுக் கொள். ஆண்டவர் உரைப்பது இதுவே! பஞ்சம் தீரும் வரை பானையில் உள்ள மாவும் தீராது. கலயத்தில் உள்ள எண்ணெயும் குறையாது. மேற்கண்ட பகுதி. 1 அரசர் 17 இல் காணுகிற படி நடந்த வரலாறுதான். கீழ்காணும் பகுதியில் சற்றே என்னோடு கற்பனை உலகில் சில நொடிகள் பயணிக்க அன்புடன் அழைக்கிறேன்.

**சாரிபாத் கைம்பெண் :** ஏய் சப்திகா! எங்கே போய்க் கொண்டு இருக்கிறாய்?

**சப்திகா:** சுள்ளி பொறுக்கத்தான்.

**சாரிபாத் கைம்பெண்:** பிறகு பொறுக்கிக் கொள்ளலாம். எங்கள் வீட்டில் எண்ணெயும். மாவும் கடவுள் அருளால் நிறைய இருக்கின்றன. நீ பெரிய பாத்திரம் கொண்டு வா. வந்து எடுத்து செல். சனாவா. நீ எங்கே போகிறாய்? தண்ணீர் மொள்ளவா? பிறகு எடுத்துக் கொள்ளலாம். இங்கே வா. எங்கள் வீட்டிற்கு வந்து பார். நிறைய மாவும் எண்ணெயும் இருக்கின்றன. வந்து உங்க வீட்டுக்கு எவ்வளவு வேணுமோ எடுத்துட்டு போ. ஏய் பெத்தோராள்! எங்கே உன் அம்மா? அம்மாவிடம் போய் ஒரு பாத்திரம் கொண்டு வரச் சொல். எங்கள் வீட்டில் அள்ள அள்ள குறையாத அளவுக்கு எண்ணெயும் மாவும் உள்ளன. வந்து எடுத்துக் கொள்ளச் சொல். மெய்குவேல் அண்ணா! அண்ணியிடம் சொல்லுங்கள். எங்கள் வீட்டில் நிறைய மாவும். எண்ணெயும் இருக்கின்றன. வந்து எடுத்துக் கொண்டு போகச் சொல்லுங்கள். இன்னும் தொடர விரும்பினால் உங்கள் கற்பனைக்கே விட்டு விடுகிறேன்.

கொடுப்பதில் இன்பம். பெறுவதில் இல்லை. நான் சேர்த்து வைத்திருக்கும் சொத்து. ஏதோ நான் மட்டுமே கடினப்பட்டு உழைத்ததால் கிடைத்த பலன் என்ற அகந்தை என்னிடத்தில் இருக்கும்போது பிறருடன் பகிரும் மனப்பான்மைக்கு சாத்தியமே இல்லை. மாறாக. இது இறைவனின் கொடை என்று கருதி இல்லாதவரோடு பகிர்ந்து கொள்வது சாத்தியமே.

நற்பணி **அருள் இளங்கோ,** இராம்நகர்

## பைபிள் படி நடக்கிறாங்களாம்



அப்பா : டேய் சூசை. அண்ணனை ஏண்டா ஓயாம அடிக்கிற?
கணவன் : அப்பா நான் ரெண்டுவாட்டிதான் அடிச்சேன்.
பாதர் : ரெண்டுவாட்டி அடிச்சா தப்பில்லையா?
கணவன் : ஏழு முறை அல்ல. ஏழு முறை எழுபது முறை மன்னிக்கனும்னு இயேசு சொல்லியிருக்காருப்பா... அதான்.

****

பிரவீன் : டேய் எட்வின் ஏண்டா கதவை சாவி போடாம தட்டிக்கிட்டிருக்க?
எட்வின் : பின்ன தட்டுங்கள் திறக்கப்படும்னு பைபிள்ல படிச்சிருக்கன்ல
பிரவின் : அடப்பாவி.

# நம்பிக்கையின் திருப்பயணிகளாக...
## (யூபிலி ஆண்டின் தயாரிப்பாக)

நமது திருஅவை 2025-ம் ஆண்டை யூபிலி ஆண்டாக கொண்டாடவிருக்கிறது. திருமண திருவருட்சாதனம் பெற்ற. குருத்துவ திருப்பொழிவு பெற்ற 25. 50 .75 ஆண்டுகளை வெள்ளி விழா. பொன்விழா. வைரவிழா யூபிலி என்று கொண்டாடுகிறோம். இயேசுவின் பிறப்போ வரலாற்றையே கி.பி.. கி.மு என்று இரண்டாகப் பிரித்த ஒப்பற்ற நிகழ்வாகும்.

ஏழு என்ற எண் முழுமையைக் குறிக்கின்றது. அவ்வகையில் ஏழாம்ஆண்டை முழுமையாகப் பார்க்கிறோம். 7 X 7 : 49 ஆண்டுகள் அதற்குப் பின் வரும் ஆண்டு அதைத்தான் யூபிலி ஆண்டாக அறிவிக்கச் சொன்னார் நம் கடவுள். (லேவி. 25:8-10) எனவே தான் யூபிலி ஆண்டை அருள்தரும் ஆண்டாக. ஓய்வின் ஆண்டாக. மீட்பின் ஆண்டாக. புது வாழ்வின் ஆண்டாக விவிலியத்தில் குறிப்பிடப்படுகிறது. கொண்டாடப்படுகிறது. யூபிலிக் கொண்டாட்டங்கள் வெறுமையான விழாக்களாக இல்லாமல் நமது வாழ்வை திரும்பி பார்த்து சுயஆய்வு செய்யவும். இறைவனுக்கு நன்றி கூறவும் சிறப்பு அழைப்பு விடுக்கின்றன.

எதிர்நோக்கின்திருப்பயணிகளாக.... இவ்வுலக வாழ்வில் நாம் தற்கால குடிகள் என்பதையும். நம் வாழ்வு ஒரு பயணம் என்பதையும் நாம் போய் சேர வேண்டிய இடம் விண்ணகம் என்பதை நினைவு படுத்தும் வார்த்தை இது. பயணம் பயணமாகவே போய்விட முடியாது. நமது இடம் வந்தால் இறங்கி தான் ஆக வேண்டும். இறங்க மாட்டேன் என்று யாருமே சொல்ல முடியாது. அது போலதான் உலக வாழ்வு. அதன் நிலையாமையின் நிச்சயமே நிதர்சனம்.

நம்பிக்கையின் திருப்பயணிகளாக என்ற மையக்கருத்தின் 3 முக்கிய கூறுகளை இக்கட்டுரையில் தியானிப்போம். விவிலிய வார்த்தைகளையும். விவிலிய மாந்தர்களையும் ஒப்புமை செய்து நம்மை மதிப்பிடுவோம். 1. திரும்பி வருதல் . 2. புதுக்கணக்கு ஆரம்பித்தல். 3 இருப்பதில் நிறைவடைதல் இவற்றை பற்றி சற்றே சிந்திப்போம்.

**திரும்பி வருதல் :** திரும்பி வருதல் என்றாலே மனம் திரும்புதல் தான் நம் நினைவுக்கு வரும். அது தவறல்ல. மனமாற்றம் ஒன்றே பலருக்கும் நிலைவாழ்விற்கான சாவியாகும். ஆனால் கடவுள் யூபிலி ஆண்டில் சொந்த நாட்டிற்கு சொந்த இனத்தாரிடம் திரும்பி வர வேண்டும் என்கிறார் (லேவி. 25.10) எதற்கு? வந்தும் ஓய்வெடுக்கச் சொல்கிறார். ஏன்?

மனிதனுக்கு ஓய்வு தேவை என்பதால். நின்று நிதானித்து தனக்குள்ளே திரும்பிப் பார்க்க. கடவுளோடு பேச . அவர் பேசுவதைக் கேட்க. உறவுகளை சரி பண்ண. இயற்கையை ரசிக்க என்று பல நிலைகளில் மனிதருக்கு ஓய்வு தேவை என்பதைக் கடவுள் பார்க்கிறார். மனிதருக்கு மட்டுமல்ல. அடிமைப்பட்டிருக்கும் சகமனிதர்களுக்கு. நிலத்திற்கு. விலங்களுக்கு என்று அனைவருக்குமே ஓய்வளிக்கச் சொல்கிறார் நம் கடவுள். அடுத்திருப்போருக்கு பகிர்ந்து கொடு. அடிமையாய் இருக்கும் உன் சகோதரரும் உரிமை வாழ்கை வாழட்டுமே என்கிறார் நம் தெய்வம்.

'நிலத்தில் பயிரிடாதே'என்கிறாரே !மக்கள் உணவுக்கு என்ன செய்வர்? இந்தக் கேள்வியை அவரே கேட்டு அவரே பதில் கொடுக்கிறார் 'ஆறாம் ஆண்டு நிலம் மூன்றாண்டுக்குரிய விளைச்சலைக் கொடுக்குமாறு என் ஆசியை அனுப்புவேன்'

என்கிறார். அவரின் இரக்கம் எத்துனை பெரிது. மனிதர்கள் ஓய்வெடுக்கும் அந்த யூபிலி ஆண்டிற்கு முந்தைய ஆண்டில் வரப்போகும் மூன்று ஆண்டிற்குரிய விளைச்சலைத் தந்து நிறைவளிக்கிறார்.

மொத்தத்தில் மனிதர்கள் தம் வாழ்வை உற்று நோக்கி சரி செய்வதும், இறைவனோடு ஒன்றிப்பதும், சகமனிதர்களோடுள்ள உறவை சீர்படுத்துவதும், அமைதியில் ஆழ்ந்திருந்து புத்துணர்வு பெற்றுக் கொள்ளவும் யூபிலி ஆண்டை பயனுள்ளதாக்க அழைப்பு விடுக்கிறார்.

நமது திருத்தந்தை அவர்கள் நான்கு R பற்றி சொல்லியிருக்கிறார்.

1. Rest - ஓய்வு. 2. Review - திரும்பிப்பார்த்து மதிப்பாய்வு செய்தல் 3. Restore - மீட்டெடுத்தல். Reconcile - ஒப்புரவாகுதல்' என்ற 4 முக்கிய கூறுகளைப் பற்றி யூபிலி ஆண்டின் செய்தியில் கூறியுள்ளார். -(நன்றி மாதா டிவி)

நாமும் உடலுக்கும் மனதிற்கும் ஓய்வளித்து நம்மையே அலசிப் பார்த்து மதிப்பாய்வு செய்து ஒப்புரவு செய்து உறவுகளுடன் சமாதானமாகி, மீட்டெடுக்க வேண்டிய உறவுகளைப் புதுப்பித்து யூபிலி ஆண்டினை அர்த்தமுள்ளதாக மாற்றுவோம்.

**புதுக்கணக்கு ஆரம்பித்தல்:**

எந்த கணக்கை எப்படி ஆரம்பிப்பது? புதுக்கணக்கு எது? பழைய கணக்கு எது? என்று கேள்விகள் பிறக்கும். இதற்கு முந்திய பகுதியில் இதற்கான விடைகளின் சாரம் உண்டு.

உதாரணமாக... தூயபவுலின் கணக்கு கிறிஸ்தவர்களை அழிக்க வேண்டும் என்றிருந்தது. அது உலக நடப்பில் யூதராய் அவர் போட்ட கணக்கு. இயேசுவோ ஒரு புதுக்கணக்கை அவரை வைத்து தொடங்கினார். 'பவுல் பிற இதை தவருக்கும் அரசருக்கும் இஸ்ரயேல் மக்களுக்கும் முன்பாக எனது பெயரை எடுத்துச் செல்ல நான் தேர்ந்தெடுத்துக் கொண்ட கருவியாய் இருக்கிறார் ' ( தி தூ 9:15) என்றார். பவுல் இறை அனுபவததால் ஆட்கொள்ளப்பட்ட நிலையில் இறை கணக்கை தனது கணக்காக நிறைவேற்றி முடித்தார்.

உலககணக்கில் சேர்த்த அத்தனையும் குப்பையாகிப்போனதில் ஒப்பற்ற செல்வமாம் இயேசுவையும், பிற இனத்தார் நடுவே பணி செய்ததில் ஆன்மாக்கள் பலவற்றையும் தனது அக்கவுண்டில் சேர்த்து விண்ணரசின் செல்வரானார்.

பேதுரு போட்டது மீன்பாடு பற்றிய கணக்கு. இயேசு போட்டதோ நற்செய்திப் பணிக் கணக்கு. இயேசுவின் மனநிலை முழுமையாய் அறிந்து கொண்ட போது பேதுருவின் அக்கவுண்டில் 3000, 5000 என்று கணக்கில்லாமல் ஏறிக்கொண்டே சென்றது. தான் யார்? எதற்காக இந்த அழைப்பு என்ற புரிதல் வருகின்ற போது கணக்குகள் புதிதாகின்றன

இப்படி விவிலிய மாந்தர்கள், புனிதர்கள் இன்னும் நாம் அறியாத தூய ஆன்மாக்கள் உலக கணக்கை முடித்துக் கொண்ட போது 0-லிருந்து புதுக்கணக்கு தொடங்கியது ஒரு வாழ்வியல் மாற்றம். நாமும் கூட உலக அக்கவுண்டை close பண்ணி விட்டு அல்லது அதை பெரிதாக நினைக்காமல் அதைக் கொண்டு இரக்கச் செயல்கள் செய்வது விண்ணரசில் புதுக்கணக்கு ஆரம்பித்து விண்ணரசின் செல்வர்களாக முயற்சிப்போம். இயேசுவும் அதைத்தான் நற்செய்தியில் பரவலாக உள்ளத்தில் பதிய பதிய சொல்லிக் கொண்டே இருப்பார்.

**இருப்பதில் நிறைவு :**

என்னிடம் என்ன இருக்கிறதோ அதில் நிறைவு காண்பது. ஆசைகளை ஓரம் தள்ளி ஆண்டவரை முன்வைத்து நடை போடுகின்ற கம்பீரம். நம்மிடம் கடன் வாங்கி இருக்கும் எளியோருக்கு வட்டியோடு கடனைத் தள்ளுபடி செய்து. நீயும் பாரமில்லமல் நல்லா இரு. நானும் கொடுத்தேனே வரலையே என்று பாரமாக உணராமல் அனைத்தையும் தள்ளுபடி செய்து மனதை இலகுவாக வைத்து கொள்கிறேன் என்ற மனப்பாங்கு அருள்தரும் யூபிலி ஆண்டில் வர வேண்டும் என்று லேவியர் நூலில் இதன் சாராம்சம் கூறப்படுகிறது. நீயும் நல்லா இரு நானும் நல்லா இருக்கிறேன் என்ற அமைதி நிலைக்கு திரும்புதல் ... இதைத்தான் கடவுள் எதிர்பார்க்கிறார். இறையன்பில் உச்சம் தொடவும் பிறரன்பின் பிணைப்பில் மகிழ்வும் நிறைவும் பெறுவதுமே யூபிலி ஆண்டில் செய்யப்பட வேண்டியவை.

என் மக்களே. இது எப்படி சாத்தியம்? அப்ப நாளைக்கு?... அதைத்தான் 'கவலை வேண்டாம்' (மத் 6) மக்களே என்று அறுதலாய் அரவணைக்கும் வார்த்தைகளை மொழிகிறார் நம் தெய்வம். 'நாளைக்காக கவலைப்படாதீர்கள். நாளைய கவலையைப் போக்க நாளை வழிபிறக்கும் ' என்று நம்மை தட்டிக் கொடுத்து திடமளிக்கிறார் நம் இயேசு ஆண்டவர்.

'எந்நிலையிலும் மனநிறைவோடு இருக்கக் கற்றுக் கொண்டுள்ளேன். எனக்கு வறுமையிலும் வாழத் தெரியும். வளமையிலும் வாழத் தெரியும்...' ( பிலி 4:11.12) இது புனித பவுலடியாரின் கூற்று மட்டுமல்ல. அவரைப் போல வாழ்ந்த திருத்தூதர்கள். புனிதர்கள் இன்னும் நாம் அறியாத பலரும் கடைபிடித்த உயர்ந்த நெறியாகும்.

'தன்னிறைவு கொண்டோர். தொழில் புரிவோர் ஆகியோருடைய வாழ்க்கை இனிமையானது. (விண்ணரசு. நிலைவாழ்வு என்ற ) புதையலைக் கண்டுபிடிப்போருடைய வாழ்க்கை அதனினும் இனியது' (சீராக் 40:18) என்கிறார் ஞான நூல் ஆசிரியர்.


இறுதியாக...

யூபிலி ஆண்டு 2025- ல் உட்புக இருக்கும் நாம் யூபிலி ஆண்டின் முக்கிய கூறுகளைக் கருத்தில் கொண்டு இறைவனை மையப்படுத்தி நம் வாழ்வையும் பணிகளையும் அழகுபடுத்துவோம். மனித நேயத்தை உயர்த்திப்பிடித்து 'புதுவாழ்வு தரும்ஆண்டை' அர்த்தமுள்ள வகையில் சிறப்பிப்போம். அருள்தரும் தெய்வம் என்றென்றும் நம்மோடிருப்பார்.

நற்பணி **ஜெஸி. P.**

---

**பைபிள் படி நடக்கிறாங்களாம்**



வேதியர் : மாணவச் செல்வங்களே. கோவிலுக்கு பைபிளோட வர்ரவங்களுக்கு ஒரு பைவ் ஸ்டார் சாக்லெட் தர்றேன்...

டார்வின் : அப்ப எங்க வீட்ல 4 பைபிள் இருக்கு.. 4 பைவ் ஸ்டார் தருவீங்களா?

வேதியர் : அடப்பாவி...

****

ஊர்க்காரர் 1: நம்ம ஜேம்ஸ். கையில கடுகை வச்சுட்டு மலைக்கிட்ட போய் நிக்கிறானாமே எதுக்குப்பா?

ஊர்க்காரர் 2:"கடுகளவு" நம்பிக் "கை" இருந்தால் இந்த மலையைப் பெயர்த்து கடலில் போடலாம்னு இயேசு சொன்னதை செய்யப் போறானாம்?

நற்பணி. **செபஸ்திராசா.** காளையார் கோவில்.

# நற்செய்திப் பணிக்குழு பணித்திட்டம்

| நாள் | நிகழ்வு | இடம் |
|---|---|---|
| நவ 30 டிச 01. | வட்டார கண்காணிப்பாளர்களுக்கான பணித் தலைமைத்துவ பயிற்சிப் பட்டறை | பூண்டி மாதா தியான இல்லம், பூண்டி |
| 01 | புதிய பணியாளர்கள் பயிற்சி | அருள்சான்று நிலையம், பரமக்குடி தந்தை ஜோசப் சேவியர் அரங்கம் காளையார்கோவில் |
| 03 | அருளமுது ஆதாரக்குழு கூடுகை | அமைதியகம், காயாவயல். அருள்சான்று நிலையம், பரமக்குடி |
| 05. | நற்பணி புஷ்பராணி இல்லத் திருமண அருளடையாள விழா | மானாமதுரை |
| 7. | 2ஆம் வத்திகான் சங்க கொள்ளை திரட்ட விளக்க கருந்தரங்கம் | பரமக்குடி |
| 8. | 2ஆம் வத்திகான் சங்க கொள்ளை திரட்ட விளக்க கருந்தரங்கம் | தங்கச்சிமடம் |
| 07 | புதிய பணியாளர்கள் பயிற்சி | புனித குழந்தை தெரசாள் கோவில் தங்கச்சிமடம் |
| 07 | பரிந்துரை செபம் | திருஇருதய ஆண்டவர் திருத்தலம் இடைக்காட்டூர் |
| 08 | புதிய பணியாளர்கள் பயிற்சி | புனித செபமாலை அன்னை கோவில் இராமநாதபுரம். வியான்னி அருள்பணி மையம், சிவகங்கை, புனித அருளானந்தர் திருத்தலம், ஓரியூர் |
| 08. | வட்டாரத் தியானக் கூட்டம் | காளையார்கோவில், கமுதி, மகிண்டி மிக்கேல்பட்டணம். |
| 08 | தொடர் களப்பணி | சாயல்குடி பங்கு மேல முந்தல் |
| 15. | வட்டாரத் தியானக் கூட்டம் | பரமக்குடி சி.கே.மங்கலம், சாலைகிராமம், |
| 15. | புதிய பணியாளர்கள் பயிற்சி | அமலஅன்னை அமைதியகம், காயாவயல், புனித ஆரோக்கிய அன்னை கோவில் சாயல்குடி |
| 22. | வட்டாரத் தியானக் கூட்டம் | செஞ்சை, செக்காலை, இராம்நகர் சிவகங்கை |
| 22. | புதிய பணியாளர்கள் பயிற்சி | தூய ஆவியார் கோவில், இராஜசிங்க மங்கலம் |
| 22. | தொடர்களப்பணி | அஞ்சுக்கோட்டை, இருதயபுரம் பங்குகள் |
| 28. | நற்பணி சகாயமேரி இல்ல திருமண உறுதிப்படுத்தும் விழா | மானாதுரை |
| 29. | வட்டாரத் தியானக் கூட்டம் | இராமநாதபுரம், முத்துப்பேட்டை |

| நாள் | மையயம் | வழிநடத்துபவர்கள் |
|---|---|---|
| 01.12.24 | அருள்சான்று நிலையம் பரமக்குடி | நற்பணி S. மோட்ச அலங்காரம்<br>நற்பணி A. பிரான்சிஸ் சேவியர்<br>நற்பணி A. ஆரோக்கியமேரி |
| 01.12.24 | தந்தை ஜோசப் சேவியர் அரங்கம், காளையார்கோவில் | நற்பணி GMS. ராணி<br>நற்பணி A. சத்தியேந்திரன்<br>நற்பணி P. சகாயராணி |
| 07.12.24 | புனித செபமாலை அன்னை கோவில், இராமநாதபுரம் | நற்பணி J. மேரிபுஷ்பம்<br>நற்பணி K. ஜஸ்டின் கபிரியேல்<br>நற்பணி பெ.தெரசா மிரண்டா |
| 08.12.24 | வியான்னி அருள்பணிமையம் சிவகங்கை | நற்பணி M. சகாயராணி<br>நற்பணி A. யூஜின் அமல்ராஜ்<br>நற்பணி M. லூயிஸ்ஜான்போஸ்கோ |
| 08.12.24 | புனித அருளானந்தர் திருத்தலம், ஓரியூர் | நற்பணி J. ஆரோக்கியசாமி<br>நற்பணி S. அந்தோனி பிரகாஷ்<br>நற்பணி இரா. அருள்பிரகாசம் |
| 14.12.24 | புனித குழந்தை தெரசாள் கோவில், தங்கச்சிமடம் | நற்பணி M. மரியகிரகோரி<br>நற்பணி X. லூர்துமேரி<br>நற்பணி J. மேரி புஷ்பம் |
| 15.12.24 | அமலஅன்னை அமைதியகம் காயாவயல் | Sr. பச்சைஜோதி<br>நற்பணி A. சகாயராஜா<br>நற்பணி S. பால்ராஜ் |
| 15.12.24 | புனித ஆரோக்கிய அன்னை கோவில், சாயல்குடி | நற்பணி M. மரியகிரகோரி<br>நற்பணி M. அருள்மரியநாயகம்<br>நற்பணி A. சந்திர புஷ்பா |
| 22.12.24 | தூய ஆவியார் கோவில் இராசசிங்கமங்கலம் | நற்பணி M. மரியகிரகோரி<br>நற்பணி S. இராஜேந்திரன்<br>நற்பணி S. தைனஸ்மேரி |

**இப்ப இல்லாட்டி எப்ப ?**
-எல்லாரோ

**தொடர் மழை போல் தொல்லைகள்**
**தொடர்ந்து வந்தாலும்,**
**தீர்வு எனும் குடையோடு ஆண்டவர் பின்**
**தொடர்ந்தே வருகிறார்.**

**இதை நாம் உணர்வது இப்ப இல்லாட்டி எப்ப?**

வீறுகொள்! துணிந்து நில்! அஞ்சாதே! கவலைப்படாதே! ஏனெனில், உன் கடவுளும் ஆண்டவருமான நான் நீ செல்லும் இடம் எல்லாம் உன்னோடு இருப்பேன். (யோசுவா 1:9)

'அமைதியை அருளும் நற்செய்தியை அறிவிப்பதற்கான ஆயத்த நிலையை உங்கள் காலில் மிதியடிகளாகப் போட்டுக் கொள்ளுங்கள்' (எபே6:15)

நற்செய்தி அறிவிப்பதற்கான ஆயத்த நிலைகள் பற்றித் தொடர்ந்து தியானித்து வருகிறோம். ஆயத்த நிலையில் முதன்மையானதும் முக்கியத்துவமானதுமான கிறிஸ்து இயேசுவின் மனநிலை கொண்டிருக்க வேண்டுமென்று தியானித்து வருகின்றோம். இறையாட்சிப் பணியை அர்ப்பணிப்போடு செய்யும் ஒவ்வொருவருக்கும் சிறந்த முன்மாதிரி இயேசு ஆண்டவர். 'சீடர் குருவை விட மேலானவர் அல்ல. ஆனால் தேர்ச்சி பெற்ற எவரும் தம் குருவைப் போலிருப்பார்'(லூக் 6:40) என்று அவரே கூறியிருப்பதை சீடத்துவ வாழ்வுக்கு அழைக்கப்பட்டுள்ள ஒவ்வொருவரும் உள்ளத்தில் பதித்து வைத்துக்கொள்ள வேண்டும்.

இயேசு ஆண்டவரின் மூன்றாண்டு இறையாட்சிப் பணியை உற்று நோக்கினோம் என்றால் பல வகையான எதிர்மறையான, உள்ளத்தைக் காயப்படுத்துவது போன்ற விமர்சனங்களையும், ஏச்சுப் பேச்சுக்களையும், பலவிதமான நேர்மறையான பாராட்டுக்களையும் அவர் சந்தித்ததை வாசிக்கிறோம். இது எதற்காகவும் அவர் வருத்தப்பட்ட தாகவோ நேர்மறையான பாராட்டுகளுக்கு மகிழ்ச்சி அடைந்ததாகவோ நாம் காணவில்லை. உண்மையான நற்செய்தி பணியாளருக்கு இத்தகைய மனநிலை அவசியம் வேண்டும். மற்றவர்களுடைய ஒவ்வொரு பேச்சுக்கும் விமர்சனங்களுக்கும் மனம் வருத்தப்பட்டு தன்னிலை விளக்கம் கொடுப்பதாக நினைத்துக் கொண்டு பதில் சொல்லிக் கொண்டிருக்க தொடங்கினோம் என்றால் அதற்குத்தான் நேரம் சரியாக இருக்கும். நாம் செய்ய வேண்டிய பணியிலிருந்து வெகு தூரம் விலகிப் போயிருப்போம்.

ஆண்டவர் இயேசுவை பரிசேயரும் மறைநூல் அறிஞரும் குற்றம் காணும் நோக்குடனே அவரை கண்காணித்துக் கொண்டிருந்தனர். 'இவன் பெருந்தீனிக்காரன், குடிகாரன் வரி தண்டுபவர்களுக்கும் பாவிகளுக்கும் நண்பன்' (மத்11:19) என்றார்கள். 'மதிமயங்கி இருக்கிறார்'(மனநிலை பாதிப்படைந்து விட்டார்) (மாற்3:21) என்றனர் .'பேய்களின் தலைவனைக் கொண்டு பேய்களை ஓட்டுகிறான்'(மத்9:34) என்றார்கள். இப்படி எத்தனையோ விமர்சனங்களையெல்லாம் இயேசு சந்தித்தார். இது எதுவும் அவர் உள்ளத்தை உறுத்தவில்லை. வருத்தத்தைக் கொடுக்கவில்லை. தான் எதற்காக வந்தாரோ அதில் மட்டும் தான் தன் கவனத்தைச் செலுத்தினார்.

இயேசுவின் போதனைகளையும் அவர் செய்த அருஞ்செயல்களையும் கண்ட பலர் அவரைப் பாராட்டினார்கள், புகழ்ந்து பேசினார்கள்.'நல்ல போதகரே'(மாற்10:17). 'உம்மைக் கருத்தாங்கி பாலூட்டி வளர்த்த உம் தாய் பேறு பெற்றவர்'(லூக் 11:27). 'நீர் மெசியா வாழும் கடவுளின் மகன்'(மத்16:16). 'நன்று போதகரே' (மாற்13:32) என்று இன்னும் பல விதமான பாராட்டுக்களைப் பெற்ற போதும், அவர் உள்ளத்தில் உவகை கொள்ளவில்லை. தன்னை விமர்சனம் செய்த போதும், பாராட்டிய போதும் அவர் ஒரே மன நிலையில் தான் இருந்தார். நற்செய்தி பணியாளர் ஒவ்வொருவருக்கும் இத்தகைய ஏச்சுப்பேச்சுக்கும் பாராட்டுக்கும் புகழ்ச்சிக்கும் அசைந்து கொடுக்காத உள்ளம் வேண்டும்.

'போற்றுவார் போற்றலும் தூற்றுவார் தூற்றலும் எங்களுக்கு ஒரு பொருட்டல்ல. புகழுவார் புகழலும் இகழுவார் இகழலும் எங்களைப் பாதிப்பதில்லை. ஏமாற்றுவோர் என அவர்களுக்குத் தோன்றினாலும் நாங்கள் உண்மையான பணியாளர்கள்' (2கொரி6:8) என்று புனித பவுல் கூறுவதை மனதில் கொள்வோம். போற்றலும் தூற்றலும் எங்களுக்கு ஒரு பொருட்டல்ல புகழப்படுவதும் இகழப்படுவதும் எங்களை

பாதிப்பதில்லை. இது எங்களை ஒன்றும் செய்துவிட முடியாது என்ற இயேசுவின் மனநிலையை நாமும் கொண்டிருக்க வேண்டும். இறையனுபவம் இல்லாதவர்கள் பார்வையில் நாம் ஏமாற்றுகிறவர்களாகத் தோன்றினாலும் நம் கடவுளுக்கு முன்பும் கடவுளை நம்புகிறவர்களுக்கு முன்பும் உண்மையான பணியாளர்களாக வாழ்ந்து காட்டுவோம். உண்மையான நற்செய்தி பணி செய்கிற ஒவ்வொருவருக்கும் போற்றுதலும் தூற்றுதலும் புகழ்தலும் இகழ்தலும் கண்டிப்பாக நடக்கும். அப்பொழுதெல்லாம் ஆண்டவர் இயேசு எளிதாய் கடந்தது போல இது எதுவும் என்னைப் பாதிக்க நான் அனுமதிக்க மாட்டேன் என்ற மனநிலையில் சவால்களைத் துணிவுடன் சந்திக்க வேண்டும். 'அவர்கள் கனிவினைக்கண்டு கொள்ளவும் பொறுமையை ஆய்ந்தறியவும் அவர்களைச் சோதித்தறிவோம்' (சாஞா2:19) என்ற சாலமோனின் வார்த்தைகளை நினைத்துக் கொள்வோம். நமக்கு வசை மொழியும் தூற்றுதலும் கிடைக்கும் போது நாம் ஆவியாரின் கனிகளாம் கனிவையும் பொறுமையையும் மற்றவர்களுக்குக் காண்பித்து நற்செய்தி அறிவிக்க ஆயத்தமாவோம்.

நற்பணி **ச.சகாயராணி,** இராம்நகர்.

## நம்பிக்கை

கிறிஸ்தவ வாழ்வில் உயிர் நம்பிக்கை. இது இருந்தால் அனைத்தையும் பெறலாம். எதையும் சாதிக்கலாம். ஏனோக்கு போல கடவுளோடு நடக்கலாம். நம்பிக்கையாளர்களில் முதல்வராக கருதப்படுபவர் ஆபிரகாம். ஏனென்றால் கடவுள் தன் மகனை பலியிட சொன்னபோதும் அவர் உள்ளம் கலங்கி அழவில்லை. மாறாக பலியிடுவதற்கான வேலையை கடைசி நிமிடம் முதல் பார்த்தார். மற்ற எல்லோரும் கண்ணீர் விட்டனர். அசைக்கமுடியாத நம்பிக்கை கொண்டிருந்தாலும் பல இறைவார்த்தைகளை கற்றறிந்தாலும் ஒரு இடுக்கண் வரும் போது நாம் எவ்வாறு நடந்து கொள்கிறோம் என்பதைபபொருந்தே நமது நம்பிக்கை வெளிப்படுகின்றது. இது நன்கு படித்த மாணவன் எதிர்கொள்ளும் தேர்வுக்கு ஒப்பாகும். பெரும்பாலும் அலகை நம்மை தாக்கும் பகுதி இந்த நம்பிக்கை என்னும் பகுதியே ஏனென்றால் இது தான் அனைத்துக்கும் ஆணிவேராக இருக்கின்றது. அலகை கீழ்க்கண்ட வழிகளில் நம் நம்பிக்கையை வாழ்வாகும்.

1. **ஆசை:** உலக இன்ப மாயைகள் மனிதனின் மனத்தில் இருக்கும் இறை எண்ணங்களை வளரச்செய்யாமல் அந்த எண்ணங்களை அமுத்தி கடவுள் நம்பிக்கையை குறைக்கின்றது. கடவுளை தேடும் நேரத்தை அது எடுத்துக்கொள்கிறது 'முட்செடிகளுக்கு இடையில் விழுந்த விதைகளுக்கு ஒப்பானோர் இறைவார்த்தையை கேட்டும் உலக கவலையும் செல்வ மாயையும் அவ்வார்த்தையை நெருக்கிவிடுவதால் பயன் அளிக்க மாட்டார்கள்' (மத் 13:22)
2. **துயரமான அனுபவங்கள்:** நல்ல நம்பிக்கையாளரின் வாழ்க்கையில் வரும் துன்பங்கள் பெரும்பாலும் பொன்னை புடமிடுவது போல அவரை மெருகேற்றுகிறது ஆனால் சிலருக்கு நம்பிக்கை குறைவு ஏற்படுத்துகின்றது. அப்போது அவர்கள் பேதுருவை போல கடவுளை சபிக்கவும், மறுதலிக்கவும் செய்கின்றனர் (மத் 26:74).
3. **சமூக ஏற்றத்தாழ்வுகள் :** சமூகத்தில் காணப்படும் ஏற்றத் தாழ்வுகளினால் மனம் உடைந்து போகும் மனிதர்கள் ஏன்தான் கடவுள் நம்மை இவ்வாறு படைத்தார் என்று அவர்மீது நம்பிக்கை இழக்கின்றனர். '...சாராள் கொடுமைபடுத்தியதால் ஆகார் ஓடினாள்' (தொநூ 16:6)

4. **அநீதி:** நீதி கிடைக்காமை கடவுளை நம்பியிருக்கும் மனிதருக்கு நீதி மறுக்கப்பட்டு அவர் துன்புறும் போது அவரது நம்பிக்கை தளர்கிறது. நல்லாரை துன்புறுத்துகிறீர்கள், கையூட்டு வாங்குகிறீர்கள், நகர் வாயிலில் வறியோருக்கு நீதி வழங்க மறுக்கிறீர்கள் (ஆமோ 5:12) .

5. **பகுத்தறிவு** : உண்மைக்குச் செவிசாய்க்க மறுத்துப் புனைக்கதைகளை நாடிச் சென்று பகுத்தறிவு கருத்துக்களை நம்பி விடைகாண முடியாத கடவுளை நம்பிக்கை இழக்கின்றனர் (2 திமோ 4:4)

6. **கலாச்சாரம்:** அடுத்திருப்பவரின் நம்பிக்கையைப் பார்த்து பலப்படாமல் அடுத்திருப்பவரின் அவநம்பிக்கையையும் தீய செயலையும் பார்த்து தனது நம்பிக்கை வாழ்வை இழத்தல். சோதோம், கொமோரா, நினிவே பட்டிணம் மக்கள் போல பாவ கலாச்சாரத்தில் வளர்தல்.

7. **பொய்யான பிரச்சாரங்கள் :** 'தூய ஆவியார் தெளிவாய்க் கூறுகிற படி இறுதிக்காலத்தில் சிலர் ஏமாற்றும் ஆவிகளுக்கும் பேய்களின் போதனைகளுக்கும் செவிசாய்த்து விசுவாசத்தை விட்டு விலகிப் போவர்' (1திமோ 4:1). தூய ஆவியின் தூண்டுதல் தமக்கு இருப்பதாகச் சொல்லிக்கொள்ளும் எல்லாரையும் நம்பிவிடாதீர்கள் (1யோவா4:1).

8. **உறுதியின்மை:** கடவுளோடு இருந்தாலும் அவரின் போதனைகளை கேட்டு பயணித்தாலும் அவர்கள் கொண்ட கொள்கையில் உறுதி யில்லாமல் போவதனால் யூதாசைப்போல பாவத்தில் விழுந்து விடுகின்றனர்.

**அலகையிடம் இருந்து நம்பிக்கையை காப்பாற்றிக்கொள்ளும் வழிகள்**

1. **நம்பிக்கை:** 'முழு மனத்தோடு ஆண்டவரை நம்பு உன் சொந்த அறிவாற்றலைச் சார்ந்து நில்லாதே.' (நீமொ 3:5) என்பதற் கேற்ப நமது சொந்த அறிவாற்றலை சார்ந்து நில்லாமல் ஆண்டவரை நம்பவேண்டும்.

2. **பயமின்மை:** 'அஞ்சாதே, நான் உன்னுடன் இருக்கிறேன். கலங்காதே நான் உன் கடவுள், நான் உனக்கு வலிமை அளிப்பேன், உதவி செய்வேன், என் நீதியின் வலக்கரத்தால் உன்னைத் தாங்குவேன் (எசா 41:10) என்னும் அவரின் வார்த்தையை நினைத்து பயப்படாமல் அவரை நம்பவேண்டும்

3. **கவலையற்று இருத்தல்:** உங்கள் கவலையெல்லாம் அவரிடம் விட்டுவிடுங்கள் ஏனென்றால் அவர் உங்கள் மேல் கவலை கொண்டுள்ளார் (1பேது 5.7) என்பதை முழுவதுமாக உணர்ந்து 'ஆண்டவர் மேல் உன் கவலையை போட்டுவிடு அவர் நேர்மையாளரை ஒருபோதும் வீழ்ச்சியுற விடமாட்டார் (திபா 55.22) என்பதை மனத்தில் நிறுத்தி அவரை நம்பவேண்டும்.

4. **கடவுளின் திட்டத்தை ஏற்றுக்கொள்ளுதல்:** உங்களுக்காக நான் வகுத்திருக்கும் திட்டங்கள் எனக்குத் தெரியும் அன்றோ, அவை வளமான எதிர்காலத்தையும் நம்பிக்கையும் உங்களுக்கு அளிப்பதற்கான நல்வாழ்வின் திட்டங்களே அன்றி கேடு விளைவிப்பதற்கான திட்டங்கள் அல்ல. ..' (ஏரே 29:11) என்ற ஆண்டவரின் திட்டத்தை ஏற்றுக்கொண்டு அவரை நம்பவேண்டும்

5. **கடவுளை கேடயமாக்கிக்கொள்வது:** '..அவரிடம் அடைக்கலம் புகும் அனைவருக்கும் அவரே கேடயமாய் இருக்கின்றார்' (2சாமு 22:31) என்பதற்கேற்ப அவரிடம் அடைக்கலம் புகுந்து அவரை கேடயமாக்கி கொள்ளும்போது எல்லா சூழலிலும் அவரை நம்பலாம்.

எல்லா சூழலிலும் நம்பிக்கையை விடாமல் அவரைப்பிரிந்து சருகாகி நெருப்பில் எரியாமல் அவரோடு இணைந்து கனி தந்து மற்றவர்களுக்கும் பயன்படுவோம்.

நற்பணி **ஜஸ்டின்,** பாம்பன்




எழுத்தாளர் கந்தர்வன் எழுதிய பல சிறுகதைகள் வாசகர்களின் சிந்தனை மாற்றத்தை ஏற்படுத்தும் தன்மை உடையன என பலரும் புகழ்ந்துள்ளனர். 'தான்' என்ற அவரின் சிறுகதை சுருக்கத்தைப் பார்ப்போம்.

அன்று ஒரு நாள் மாலை நான் டீ கடையில் நண்பர்களோடு இருக்கும்போது பக்கத்து மருத்துவமனையில் இருந்த வெளி நோயாளி ஒருவர் இரண்டாவது மாடியில் இருந்து கால் தவறி கீழே விழுந்து விட்டார். யாரும் உதவ முன் வரவில்லை நான் தான் ஓடி போய் தூக்கி உதவி செய்ய சென்றேன். நான் ஒரு சமூக சேவகன் எனது பொதுவுடமை சிந்தனைகள் என்னை இப்படி பிறர் நலவாதியாக மாற்றியது. இப்போது எனது மாத வருமானத்தில் ஒரு பகுதியை எடுத்து டாக்ஸி எடுத்து போய்க் கொண்டிருக்கிறேன். தஞ்சாவூர் மெடிக்கல் காலேஜில் தான் பார்க்க வேண்டும் என்று சொன்னார்கள் ஆதலால் அங்கே சென்று கொண்டிருக்கிறேன். டாக்சியில் ஒன்றாக பயணிக்கிறோம் அவன் யாரோ நான் யாரோ எப்படி எங்களை இணைத்தது இந்த பொதுவுடமை சிந்தனை. இந்த டாக்ஸியின் டிரைவர் உட்பட அனைவரும் சுயநலவாதிகள். இரவு 11 மணி தஞ்சாவூர் மெடிக்கல் காலேஜ் அரசு மருத்துவமனை வந்தேன். எனது வேட்டி, சிப்பா எல்லாம் ரத்தக்கரையானது. ஒரு வழியாக மருத்துவமனையில் சேர்ந்தேன். டாக்டர் ரத்தம் தேவை என்றார் எனது கையை நீட்டி 'எவ்வளவு தேவையோ உறிஞ்சி எடுத்துக்கோங்க 'என்றேன். எல்லாம் முடிய காலை 3 மணி ஆனது . உடல் சோர்வாக இருந்தது. ஹாஸ்பிட்டல் வெளியே வந்தேன். ஜீஸ் கடையை தேடினேன். ஒரு கைலி வேட்டியை மட்டும் போர்த்தி ஒருவர் படுத்திருந்தார். அவருக்கு வேறு எதுவுமே இல்லை. நான் அவரை எழுப்பி ஜீஸ் போட சொன்னேன். அவர் ஐந்து ஆறு ஆரஞ்சு பழங்களை எடுத்து பெரிய டம்ளரில் நிறைய ஜீஸ் போட்டு கொடுத்தார். குளிர குளிர ஜீஸ் குடித்தேன். உடம்புக்கு தெம்பாக இருந்தது. எனது சட்டை பாக்கெட்டில் இருந்து 100 ரூபாய் எடுத்து அவர் கையில் நீட்டினேன். அவர் எனது கையில் ரத்தம் கொடுத்த அடையாளத்தை பார்த்ததால் என்னை சற்று பார்த்து 'என்ன சார் ரத்தம் கொடுத்தாயா?' என கேட்க 'ஆம்' என்றேன் உடனே அவர் 'சாரி சார் ரத்தம் கொடுத்தவங்ககட்ட நான் காசு வாங்க மாட்டேன் ' என சொன்னார். இந்த ஒரு நாள் நான் ஒரு சமூக சேவகன் என்ற அகந்தை அப்போதே சுக்கு நூறாக உடைந்தது.

இந்த கதை ஒரு சமூக சீர்திருத்த கருத்தை சொன்ன போதிலும், தன்னைவிட பல மடங்கு பிறர் நலம் கொண்ட ஒரு ஜீஸ் கடைக்காரனை முன்னரே பார்த்து இருந்தால் தன்னைப் போன்ற பலரும் நல்ல காரியங்களை செய்கின்றார்கள் என்ற எண்ணம் அவருக்கு முன்னாலே தெரிந்திருக்கும். பல நேரங்களில் நம்மை விட பல மடங்கு நன்மை தன்மை கொண்ட மனிதர்களை கவனிக்க மறந்து விடுகிறோம் நமக்கு அருகில் நம்மை சுற்றி நம்மோடு பல நற்பண்புகளைக் கொண்ட மனிதர்கள் வாழ்ந்து கொண்டு தான் இருக்கிறார்கள் எனவே அத்தகைய நல்ல மனிதர்களை கண்டு கொண்டு அவர்களோடு நல்லிணக்கத்தோடு பயணிக்கும் போது நமது நன்மைத்தன்மை மேலும் உயர்ந்து கொண்டே இருக்கும்.

**நேர்மறை சுற்றத்தின் பயன்கள்:** (Benefits of Positive networks)

1. மனநலம் மற்றும் வாழ்க்கை மேம்படுகிறது .
2. தன்னம்பிக்கை சுய மதிப்பீடு கூடும்.
3. படைப்பாற்றல், பிரச்சனைகளை தீர்க்கும்திறன் அதிகமாகிறது .
4. சமூக உறவில் வலிமை பெறுகிறோம் சமூக தொடர்பில் வளர்கிறோம்.
5. மன அழுத்த மேலாண்மையிலும் கலங்காத மனநிலையிலும் வளர்கிறோம்.
6. அதிக வாய்ப்புகளை உருவாக்க முடியும் நல்ல வேலை வாய்ப்புகளை தெரிந்து கொள்ள முடி யும்.

உடல் நலமும் வலுமையும் பெற்று நல்ல எண்ணத்தோடு தொடர்ந்து பயணிக்க சக்தி பெறுகிறோம்.

**நேர்மறை சுற்றத்தை உருவாக்குவது எப்படி;** (How to build a positive network)

1. உங்கள் விருப்பங்களை கொண்டு குழுக்களை தேடிச் சென்று சேர்ந்து கொள்ளுங்கள் .
2. கருத்து அரங்குகளிலும் பயிற்சி பாசறைகளும் சேர்ந்து கொள்ளுங்கள்.
3. எது மிகவும் பிடிக்குமோ அந்த செயல்களை தன் ஆர்வத்தோடு செய்யுங்கள் .
4. உங்களைப் போன்ற நல்லவரிடம் தொடர்பில் இருங்கள்.
5. குழு நிகழ்வுகளிலும் செயல்பாடுகளிலும் கலந்து கொள்ளுங்கள் .
6. உங்களின் திறனுக்கு ஏற்ற வழிகாட்டிகளையும் பயிற்சியாளர்களையும் தேடி கண்டுபிடிங்கள். மேலும் தற்போது உள்ள உறவுகளில் நன்மை தனத்தை கட்டி எழுப்புங்கள்.

நேர்மறை சுற்றம் நமக்கு எப்போதும் நன்மை தரக்கூடியது அதை சரியாக பேணிக்காப்பது நமது கடமை ஆகும். 'பூவோடு சேர்ந்த நாறும் மணக்கும்' என்ற பழமொழிக்கு ஏற்ப நல்லவர்களோடு இணையும்போது நல்ல அதிர்வலைகளை நாம் பெறுகிறோம். நல்ல வழிகாட்டல்களை பெறுகிறோம். தொடர்ந்து நல்ல பின்பற்றுதலை நாம் பெறுகிறோம். நல்லவர்களை பார்க்கும்போது அவர்களோடு வாழும் போது நாம் நன்மை தரும் நண்பர்களாக வாழ்கிறோம் என்பதில் எந்த ஐயமும் இல்லை. எப்போதும் நேர்மறை எண்ணம் கொண்ட மனிதரோடு இணையும்போது அவர்களுடைய நேர்மறை எண்ணம் நேர்மறை வழிகாட்டல் நேர்மறையான அணுகுமுறை நம்மை சூழ்ந்து நம்மை நேர்மறையான வடிவில் செயல்பட நம்மை அறியாமலே தூண்டும் என்பதில் எந்த ஐயமும் இல்லை.

நேர்மறை தாக்கத்தை நேர்மறை மனிதர்களிடம் தான் நாம் பெறுகிறோம் என்பதை உணர்ந்து கொண்டால் நாம் யாராக இருக்க விரும்புகிறோமோ நாம் யாரோடுபயணிக்க வேண்டும் என விரும்புகிறோமோ நாம் யாரோடு இணைந்து நல்ல காரியங்களை செய்ய வேண்டும் என விரும்புகிறோமோ அவர்களை இந்த பிரபஞ்சம் இணைத்து வைக்கும். எனவே நல்ல மனிதர்களை கண்டுபிடித்து அவர்களோடு இணைந்து பயணிப்பது நமது நன்மைத்தனத்தை பல மடங்கு அதிகமாக்கும்.

**அசை போட அரை நிமிடம்:**

'நாம் தேடும் நேர்மறை சுற்றம்
நம்மை எப்போதும் சுற்றும்'

சகோ. **S.ஜான் ஜோ பிரயாகர். SHJ.**
மனநல ஆற்றுபடுத்துநர். பரமக்குடி.

## என்னை மன்னியும்

- உன்மீது அன்பு கூர்வது போல் உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக என்ற கட்டளையை மறந்து அன்பற்ற வாழ்க்கை வாழ்ந்ததை எண்ணி மனம் வருந்துகிறேன் இறைவா! என்னை மன்னியும் (மாற்க 12:31)
- அனைவருக்காகவும், மன்றாடுங்கள், இறைவினிடம் வேண்டுங்கள். பரிந்து பேசுங்கள் நன்றி செலுத்துங்கள் என்பதை மறந்து பிறருக்காக மன்றாட மறந்ததை எண்ணி மனம் வருத்துகிறேன் இறைவா! என்னை மன்னியும் (1திமொ 2:1)
- தூய்மையான உள்ளத்தோர் பேறு பெற்றோர் ஏனெனில் அவர்கள் கடவுளைக் காண்பர் என்று தெரிந்தும் வஞ்சக உள்ளத்தோடு பிறரின் வாழ்வைக் கெடுத்து வாழ்ந்ததை எண்ணி மனம் வருந்துகிறேன் இறைவா! என்னை மன்னியும் (மத் 5:8).
- நானே உலகின் ஒளி நானே, என்ற இறைவார்த்தைக்கு மாறாக உண்மை ஒளியாம் இயேசுவை மறந்து உலக மாய ஒளியில் வாழ்ந்து வாழ்ந்ததை எண்ணி மனம் வருந்துகிறேன் இறைவா! என்னை மன்னியும் (யோவான் 8:12).

நற்பணி S.P. **சவரிமுத்து**, இராம்நகர்

## செப வீரர்களுக்கு

**இம்மாத செபக் கருத்து**

- யூபிலி 2025 ஆண்டு நம்மை நம்பிக்கை வாழ்வில் ஆழம் பெறவும், உயிர்த்த இயேசு அனுபவத்திற்கு அழைத்துச் செல்லும் திருநிகழ்வாகிட
- நம்பிக்கை திருப்பயணிகளாக பயணிக்கும் கத்தோலிக்கர்கள் நம்பிக்கையின் அடையாளமாய் வாழ்வில் திகழ.
- நல்ல மழை பெய்து விவசாயம் செழிக்க
- போர் சூழல் நிலவும் உலகின் பல பகுதிகளில் அமைதியின் ஆவியானவரின் வல்லமை செயல்பட
- இந்தியாவில் சனநாயக மற்றும் மதச்சார்பின்மை நெறிகள் பாதுகாக்கப்பட
- மணிப்பூர் மாநிலத்தில் அமைதி திரும்பி மக்கள் ஒற்றுமையுடன் வாழ
- யூபில் ஆண்டில் திரு அவையும், மறைமாவட்டமும் முன்னெடுக்கும் ஆன்மிக நிகழ்வுகள் நம்பிக்கை எழுச்சியை உருவாக்க

**விரும்பத்தக்க செயல்பாடு:**

- யூபிலி ஆண்டு 2025 இறைவேண்டலைத் தினமும் செபித்தல்
- கிறிஸ்து பிறப்பு விழாவில் ஒரு எளிய குடும்பத்தில் நம்பிக்கை, மகிழ்ச்சி ஒளியை எற்ற உதவுதல்.



2ஆம் வத்திகான் சங்க கொள்கை திரட்டு குறித்த சிறப்புப் பயிற்சி - திண்டிவனம்



புதிய பணியாளர்கள் பயிற்சி அருள்சான்று நிலையம்



வட்டாரத் தியானக் கூட்டம்
இடைக்காட்டூர்



புதிய பணியாளர்கள் பயிற்சி
தங்கச்சிமடம்




வட்டாரத் தியானக் கூட்டம் - சாயல்குடி

படங்களைக் கொண்டு இறைவசனத்தை கண்டுபிடியுங்கள்?

படங்களைக் கொண்டு நினைவுக்கு வரும் இறைவார்த்தையை சட்டென்று சொல்லுங்கள் பார்ப்போம்.

துப்பு வேண்டுமா? **திருப்பாடல்கள் 32-34 அதிகாரங்களுக்குள்**















**Narseithi Paniyalar** (தனிச்சுற்றுக்கு மட்டும்)
is published on behalf of the Commission for Proclamation, Diocese of Sivagangai from Arulchandru Nilayam (Faith Resource Development Centre), Brothers of the Sacred Heart, Ulaganathapuram, Vendhoni (B.P.O.) Paramakudi - 623 701, Ramnad Dist. Tel : 04564- 230453.
www.arulchandrunilayam.org |Email: arulchandrupmk@gmail.com